வடமாகாண முதன்மைத் திட்டமொன்றிற்கான

# பொருளாதார அபிவிருத்திக் கட்டமைப்பு

இலங்கை மத்திய வங்கியினால் பொறுப்புரிமையளிக்கப்பட்ட அறிக்கை

*இவ்வறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள கருத்துக்கள் யாவும் குழு அங்கத்தவர்களின் சுயாதீனமான தனிப்பட்ட கருத்துக்களேயன்றி அவை இலங்கை மத்திய வங்கியின் கருத்துக்களைப் பிரதிபலிக்கவில்லை.*

ஓகத்து 2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாகாண முதன்மைத் திட்டமொன்றிற்கான

# பொருளாதார அபிவிருத்திக் கட்டமைப்பு

**இலங்கை மத்திய வங்கியினால் பொறுப்புரிமையளிக்கப்பட்ட அறிக்கை**

*இவ்வறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள கருத்துக்கள் யாவும் குழு அங்கத்தவர்களின் சுயாதீனமான தனிப்பட்ட கருத்துக்களேயன்றி அவை இலங்கை மத்திய வங்கியின் கருத்துக்களைப் பிரதிபலிக்கவில்லை.*

ஓகத்து 2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

வடமாகாணத்திற்கான பொருளாதார அபிவிருத்தி முதன்மைத் திட்டத்தின் இக்கட்டமைப்பிற்கு பொறுப்புரிமையளித்தமைக்காக, இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர், முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி அவர்களுக்கு நாங்கள் நன்றி கூற கடமைப்பட்டிருக்கின்றோம். மேலும், மத்திய வங்கியின் முகாமைத்துவத்திற்கும் அவர்கள் வழங்கும் ஆதரவிற்குமான எமது நன்றி உரித்தாகட்டும்.

எமது ஆலோசனைகள் மற்றும் கள ஆய்வுகளில் எம்மோடு இணைந்து கொண்டு தமது நுண்ணறிவினையும் அனுபவங்களையும் எம்மோடு பகிர்ந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகள். இந்த அறிக்கையானது இலங்கை மத்திய வங்கியின் கிளிநொச்சி பிரதேச அலுவலகத்தின் அலுவலர்கள் குழுவின் ஒழுங்கமைப்பு உதவியின்றி முழுமை பெற்றிருக்க முடியாது. இக்குழுவின் செயலாளர்களாகப் பணியாற்றிய திரு. அ. அ. றொ. லான்சன் மற்றும் திருமதி. த. ஜயரூபி ஆகியோருக்கு எமது நன்றிகள். மேலும் செல்வி. ஜா. குகனேந்திரன் அவர்களின் ஆய்விற்கான ஆதரவிற்காக எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

திருமதி. சோமேசசுந்தரி கிருஷ்ணகுமார் மற்றும் பேராசிரியர். ஷாகுல் ஹஸ்புல்லா ஆகிய எமது இரண்டு குழு அங்கத்தவர்களினதும் மகத்தான பங்களிப்பினை நாங்கள் நினைவிற்கொள்கின்றோம். திருமதி. சோமேசசுந்தரி கிருஷ்ணகுமார் அவர்கள் தமது இந்த முயற்சியில் அயராது ஈடுபட்டிருந்த போதிலும் அவரது மோசமான உடல்நிலை காரணமாக தொடர்ந்தும் எம்மோடு பணியாற்ற முடியாமல் போனதுடன் இந்த அறிக்கை முழுமை பெறுவதற்கு முன்னரே இறைபதம் அடைந்துவிட்டார். அதேபோன்று பேராசிரியர் ஷாகுல் ஹஸ்புல்லா அவர்கள் தமது திடீர் சுகயீனம் காரணமாக எம்மை சோகத்திற்கு உள்ளாக்கி இந்த அறிக்கை நிறைவு செய்யப்படுவதற்கு முதல் நாள் எம்மை விட்டுப்பிரிந்தார். இவ்விரண்டு கல்விமான்களுக்கும் ஈ வாழ்நாளை இவ்வாராய்ச்சிக்காக செலவிட்டதற்காகவும் பெறுமதிமிக்க ஆய்வுக்குழுவில் பங்களித்தமைக்காகவும், நாடு முழுவதிலும் ஒதுக்கப்பட்டு புறந்தள்ளப்பட்ட மக்களுக்காக குரல் கொடுப்பதில் அவர்களின் அயராத உழைப்பிற்காகவும் எமது நன்றிகளையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இக்கட்டமைப்பானது வடமாகாணத்தின் நீடித்துநிலைத்திருக்கும் அபிவிருத்தி பற்றிய கரிசனைக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும் என நாம் நம்புகின்றோம்.

பா. சிவதீபன்<br>
குழுவின் தலைவர்

குழு அங்கத்தவர்கள்:

முனைவர். அ. கதிர்காமர்<br>
முனைவர். ஆ. கந்தையா<br>
திரு. சி. கிருஷ்ணானந்தன்<br>
திருமதி. சு. நவரட்ணம்<br>
திரு. ம. சூரியசேகரம்<br>
வைத்தியர். ரா. சுரேந்திரகுமாரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளடக்கம்


1. நிறைவேற்றுச் சுருக்கம் ........................................ 03
2. அறிமுகம் ........................................ 08
3. வடக்கு பொருளாதாரச் சூழமைவு ........................................ 11
4. போருக்குப் பின்னரான மீள்கட்டுமானக் கொள்கைகளும் அவற்றின் சவால்களும் ........ 14
5. பொருளாதார அபிவிருத்தி முதன்மைத் திட்டத்திற்கான கட்டமைப்பு ........................ 18
6. வடக்கின் பிரதான சவால்கள் ........................................ 29
7. துறைசார் முன்னுரிமைகள் ........................................ 32
8. பேரண்டப் பொருளாதார முன்னுரிமைகள் ........................................ 37
9. முடிவுரை ........................................ 39




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாணத்திற்கான பொருளாதார அபிவிருத்திக் கட்டமைப்பு - முதன்மைத் திட்டம்

## 1. நிறைவேற்றுச் சுருக்கம்

இப் 'பொருளாதார அபிவிருத்தி முதன்மைத் திட்டமொன்றிற்கான கட்டமைப்பு' இன் நோக்கம் 2030 அளவில் வட இலங்கையின் எதிர்காலத்திற்கான நீண்ட கால வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான 'திட்ட வரைவு' ஒன்றினை உருவாக்குவதற்கு யதார்த்தமானதும் இயக்கவாற்றல் மிக்கதுமான கருவியொன்றாக விளங்குவதேயாகும். இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரது கோரிக்கையின்படி இக்கருதுகோள்மயப்படுத்தலை முன்னெடுத்துச் செல்வதற்காக குழுவொன்று நிறுவப்பட்டது. ஆளுநரின் பங்கேற்புடன் வடக்கில் நடத்தப்பட்ட கூட்டங்களின் போது போருக்குப் பின்னரான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் பெறுபேறுகள் போதுமானளவில் இல்லை என்பது அவதானிக்கப்பட்டது. குறிப்பாக, உள்ளூர் குடித்தொகையினருக்கான வலுவான தொழில் வாய்ப்பு மற்றும் வருமானம் போதுமானதாக இல்லாமையின் காரணமாக தோன்றிய கடன்சுமை நெருக்கடி முக்கியமானதொன்றாகக் காணப்படுகிறது.

இப்பிராந்தியத்தில் உருவாகி வரும் புதிய நோக்குகள் மற்றும் அனுபவங்களைக் கவனத்திற்கொண்டு, இக்கட்டமைப்பானது, வட மாகாணத்திற்கு சுபீட்சத்தினையும் ஏற்றத்தாழ்வற்ற சமத்துவமான தன்மையினையும் கொண்டுவரும் விதத்தில் முன்னோக்கிப் பயணிப்பதற்கான புதிய பாதையொன்றினை வரைவதற்கு கொள்கை வகுப்போர்கள், கொடைவழங்குநர்கள், குடிசார் சமூகத்தவர்கள் ஆகியோருக்கு வளங்களை வழங்கும். அவ்வாறு செய்யும் பொழுது, சமாதானம் மற்றும் மீளிணக்கங்களின் பரந்தளவிலான குறிக்கோள்களையும் தேசிய பொருளாதாரத்தின் வளர்ச்சியுடனான ஒருங்கிணைப்பினையும் வலுவான முறையில் அடைந்து கொள்ள முடியுமென நம்பப்படுகிறது.

மூன்று தசாப்த காலப் போருக்குப் பின்னர், வடக்கில் போருக்குப் பின்னைய சமூகப் பொருளாதார சவால்கள் அழிவடைந்த மற்றும் அபிவிருத்தியடையாத உட்கட்டமைப்பு, சிதைவடைந்து போன சமூக நிறுவனங்கள் மற்றும் நாட்டின் எஞ்சிய பகுதிகளுடன் ஒப்பிடுகையில் பின்தங்கியிருக்கும் மனித வளங்கள் என்பனவற்றின் நியதிகளில் மிகப் பிரமாண்டமானவைகளாகக் காட்சி தருகின்றன. போருக்குப் பின்னரான மீள்கட்டுமான உபாயமானது கட்டடவாக்க உட்கட்டமைப்பு, சுயதொழில் வாய்ப்பினை ஊக்குவிப்பதற்கான கொடுகடன் விரிவாக்கம் மற்றும் தனியார் துறை முதலீட்டினை ஊக்குவித்தல் என்பனவற்றை மையப்படுத்தியிருந்த போதும், வலுவான நீடித்த பொருளாதார வளர்ச்சி, தொழில்நிலை மற்றும் அதிகரித்த வீட்டலகுகளின் வருமானங்கள் என்பனவற்றை வழங்குவதில் எதிர்பார்ப்புக்கள் பூர்த்தி செய்யப்படவில்லை.

இத்தகைய பெறுபேறுகளுக்குப் பல காரணிகள் பங்களித்திருக்கின்றன. முதலாவது, மாகாணத்தின் பொருளாதார தளத்தில் ஆதிக்கம் செலுத்துபவர்களான "சிறியளவு" உற்பத்தியாளர்களினதும் நிறுவனங்களினதும் உற்பத்தியாக்கத்தினை மாற்றியமைக்கின்ற விதத்திலான முறையியல் சார்ந்த முதலீடுகளுக்கான அபிவிருத்தி முன்னெடுப்புக்கள் தோல்வி கண்டிருப்பதாகும். இரண்டாவது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிவரும் முதலீடுகள் இப்பிராந்தியத்திற்குள் தற்பொழுது காணப்படுகின்ற தேர்ச்சி மற்றும் இயலளவிற்கேற்ற முறையில் கட்டியெழுப்பப்பட்டிருக்கவில்லை. மூன்றாவது, அபிவிருத்தியில் அர்த்தமுள்ள விதத்தில் பங்கேற்கச் செய்வதனை இயலுமைப்படுத்தும் விதத்தில் நீண்ட போரிலிருந்து மீண்டுவருகின்ற மக்கள் இலகுவில் பாதிக்கப்படக்கூடிய தன்மைக்குப் போதுமானளவிற்கு தீர்வு காணப்படாதிருப்பது. இறுதியாக, மீள்கட்டுமான உபாயம் தெளிவான போக்கினை போதியளவில் கொண்டிராததுடன் அதன் தன்மையும் முழுமையானதாகக் காணப்படாததுடன் போதுமான இணைப்பினையும் அது தம்மிடையே கொண்டிருக்கவில்லை. உபாயமானது 'செயற்றிட்ட அடிப்படை' இனை மட்டுமே மனதில் நிறுத்தி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இது சாதகமற்ற விளைவுகளுக்கே வழிவகுத்திருக்கிறது.

மாகாணத்தின் வளங்கள், இயலாற்றல்கள் மற்றும் தேவைகளைக் கொண்ட பேரண்டப் பொருளாதார ஆய்வுகளில் கண்டறியப்பட்டவற்றின் அடிப்படையில், மிக இன்றியமையாத வடக்கின் பொருளாதார அபிவிருத்திக்குப் புதிய தொலைநோக்கும் பயணிக்கும் பாதையும் மிக அவசியமான தேவையாகக் காணப்படுகின்றன. அத்தகைய ஆய்விற்கு ஆதரவளிக்கக்கூடிய கட்டமைப்பொன்று உருவாக்கப்பட்டுள்ளதுடன், இது, மூன்று உள்ளகத் தரவுத் தூண்களான உற்பத்திக் காரணிகள், இயலுமைப்படுத்துகின்ற சூழல், அபிவிருத்தியின் சமூக அடிப்படைகள் என்பனவற்றைச் சுற்றி உருவாக்கப்பட்டுள்ளது.

உற்பத்திக் காரணிகள், உற்பத்தியையும் பொருளாதார வளர்ச்சியையும் அதிகரிப்பதற்கான முக்கிய உள்ளீடுகளாக விளங்கும் மாகாணத்தின் மூலதனம், தொழிலாளர், நிலம் மற்றும் இயற்கை மூலவளங்கள் என்பனவற்றினைக் குறிக்கின்றன. உற்பத்தி இடம்பெறுகின்ற சூழல் உள்ளார்ந்த வளர்ச்சியின் மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தினைக் கொண்டிருக்கிறது என்பதனை அங்கீகரிக்கின்ற விதத்தில் கட்டமைப்பானது தொழில்நுட்பவியல், உட்கட்டமைப்பு, ஒழுங்குவிதிகள், நிறுவனங்கள் மற்றும் சந்தைகள் என்பன வசதிப்படுத்தல் வகிபாகத்தினை ஆற்றுவதனை அடையாளம் கண்டிருப்பதனால் அவை கவனிக்கப்பட வேண்டிய கூறுகளாக விளங்குகின்றன. இறுதியாக, சமூக அடித்தளங்களை, குறிப்பாக உணவு மற்றும் ஊட்டச்சத்து, வாழ்க்கைத்தர நிலைமைகள், சுகாதாரம் மற்றும் கல்வி என்பன தொடர்பான விடயங்களை வலுப்படுத்துவதன் மூலம் அபிவிருத்திகளில் பங்கேற்பதற்கான அவர்களின் இயலாற்றலை உறுதிப்படுத்துவதற்கு மக்கள் மீதான முதலீடுகள் வலியுறுத்தப்படல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**<u>அபிவிருத்திக்கான சமூக அடித்தளம்</u>**

**உணவும் ஊட்டச்சத்தும்**

*உணவுப் பாதுகாப்பு மற்றும் வீட்டலகுகளின் மீளெழுச்சி*

**உறைவிடம், நீர் மற்றும் சுகாதாரம்**

*நிலமற்றோருக்கான வீடமைப்பு, சுத்தமான நீர் மற்றும் சுகாதார சேவைகள்*

**சுகாதாரம்**

*மாற்றுவலுவுடையோர் மற்றும் மனநலம் பாதிக்கப்பட்டோர் போன்றோருடன் வாழும் மக்களுக்கும் வயது முதிர்ந்தோர் குடித்தொகைக்குமான சேவைக் கிடைப்பனவை இலகுபடுத்தல்*

**கல்வி**

*பாடசாலை வரவு மற்றும் அடைவு, விஞ்ஞானம் மற்றும் ஆங்கில கற்பித்தல் தரம் போன்றவற்றை அதிகரித்தல்*

***உற்பத்தியின் பொருளாதாரத் தளத்தினை பலப்படுத்துவதற்காக சமூகத்தின் பாதிக்கப்படக்கூடிய தன்மைகளைக் கட்டுப்படுத்தல்***

**<u>உற்பத்தி</u>**

**மூலதனம்**

*தாங்கிக் கொள்ளக்கூடிய முதலீட்டு மூலதனம், தொழிற்படு மூலதனம்*

**தொழிலாளர்**

*பெண்கள் தொழிற்படையின் பங்கேற்பு, இளையோர் வேலைவாய்ப்பின்மை, திறன் அபிவிருத்தி, புலம்பெயர் தொழிலாளர்கள்*

**நிலமும் இயற்கை வளங்களும்**

நிலக்கிடைப்பனவு,நிலப்பயன்பாடு, நிலம் துண்டாடப்படல், இயற்கைவள முகாமைத்துவம் மற்றும் பாதுகாப்பு

***வேளாண்மை, கைத்தொழில் மற்றும் சேவை உற்பத்திக்காரணிகளை ஒழுங்கமைத்தலும் ஒன்றுதிரட்டலும்***

**<u>சூழலை இயலுமைப்படுத்தல்</u>**

**தொழில்நுட்பம், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி**

*குறைந்த தொழில்நுட்பம், குறைந்த செலவிலான தீர்வுகளை பரந்த நிலையில் மேம்படுத்துதல்*

**உட்கட்டமைப்பு**

சிறிய உற்பத்தியாளர்களின் தேவைகளுக்கு எதிர்கால உட்கட்டமைப்புக்களைச் சமப்படுத்தல்

**ஒழுங்குவிதிகள்**

நிலக்கிடைப்பனவு, இயற்கை வளங்களின் அடித்தளத்தினை பாதுகாத்தல், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நிலைகளை மேம்படுத்தல்

**நிறுவனங்கள்**

*காத்திரமான ஆதரவினை வழங்குவதற்கும் உற்பத்தியாளர் அமைப்புக்கள் மற்றும் வலையமைப்பு போன்றவற்றிற்கு அரச நிறுவனங்களை ஒழுங்குமுறைப்படுத்தல்*

**சந்தைகள்**

*முறைமை அபிவிருத்தி, ஏற்றுமதி வியாபார இணைப்புகள்*

அதிகரித்த உற்பத்தி உறுதித்தன்மைக்குப் பொருளாதாரச் செயலாற்றுநரின் மாற்றமடைகின்ற இயலாற்றலுக்கான பொருளாதாரச் சூழல் பதிலிறுப்புக்களை உறுதிப்படுத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டமைப்பை பயன்படுத்திய பகுப்பாய்வானது, சமூக மீளெழுச்சியினைப் பலப்படுத்துவதற்கான சமூகங்களின் முதலீடானது வடக்கிற்குப் பொருத்தமான உபாயமாக அமையுமென்பதனையும் மெதுவானதெனினும் மிகவும் உறுதியான ஒரு பொருளாதார வளர்ச்சிப் பாதையினை சிபாரிசு செய்கின்றமையினையும் எடுத்துக்காட்டுகிறது. புதிய அபிவிருத்தி மாதிரிகள்:

- உற்பத்தித்திறன் மேம்பாட்டுச் செயன்முறையை ஆரம்பிப்பதற்கு, ஏற்கனவேயுள்ள மற்றும் புதிய சிறிய அளவிலான உற்பத்தியாளர்கள் மற்றும் கைத்தொழில்களில் பொருத்தமான முறையில் மூலதனத்தை முதலீடு செய்தலிலும்
- சாத்தியமானளவிற்கு அதிகளவு மக்கள் பாதுகாப்பானதும் பத்திரமானதுமான கிரமமான வேலைவாய்ப்புகளைப் பெற்றுக்கொள்ளும் விதத்தில் தொழிலாளர் செறிவினைக் கொண்டிருத்தலிலும்
- நிலம் மற்றும் இயற்கை வளங்களை செறிவான முறையில் பயன்படுத்துவதோடு, முக்கியமாக வேளாண்மையை முன்னிலைப்படுத்துவதிலும்
- பாரியளவான இடர்நேர்வுகளை எதிர்நோக்கக்கூடியவர்களுக்கும், ஏற்றுமதி உட்பட உயரளவான பெறுமதி சந்தையினுள் நுழையக்கூடியவர்களுக்குமாக நடுத்தரகால முயற்சியாளர்களுக்கு ஆதரவளிப்பதிலும்
- மாகாணம் முழுவதிலும் வேறுபட்ட மக்கள் குழுக்களிடையேயும் பிராந்திய மற்றும் பாலின வேறுபாடுகள் நியாயமான விதத்தில் குறைக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதிலும்

முக்கிய கவனத்தினைச் செலுத்துவதாக இருத்தல் வேண்டும்.

பொருளாதார தளத்தினை வலுப்படுத்துகின்றமையின் மீது கவனத்தினைச் செலுத்துகின்ற அதேவேளையில் பொருளாதார அபிவிருத்திக்கான முன்னெடுப்புக்களுக்கு ஆதரவளிப்பது என்ற இந்த இருமுனை உபாயத்திற்கு ஆதரவளிப்பது வடக்கில் ஒரு வலுவானதும், மிகவும் நெகிழ்ச்சி உடையதுமான பொருளாதார அடித்தளத்தினை உருவாக்குமென்பதுடன், இதன் மூலம் பொருளாதார வளர்ச்சியை நீண்டகாலத்தில் விரைவுபடுத்தவும் முடியும்.

மேலும், எதிர்காலத்தில் திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தலில் வடக்கில், குறிப்பாக, போருக்குப் பின்னரான எச்சங்களுடன் தொடர்பான சவால்களை ஆரம்பத்திலிருந்தே கவனத்திற்கொள்ளல் வேண்டும். இவை புதிய பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சிநிரலை முன்னெடுத்துச் செல்வதற்கான தலைமைத்துவத்தின் தேவை, செயன்முறைப்படுத்தலை நடைமுறைப்படுத்துவதன் மூலம் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினை நோக்கி மீளதிசைமுகப்படுத்தல், பெருமளவு சமூகப் பங்கேற்பு, தொழிற்படை அபிவிருத்தி மற்றும் காலநிலை மாற்றம் போன்ற நிச்சமற்ற தன்மைகளுக்கான திட்டமிடல் என்பனவற்றை உள்ளடக்குகின்றன.

மூலவளங்கள் சிறந்த முறையில் பயன்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக மாகாண மட்டத்தில், பொருளாதார அபிவிருத்திக்கான புதிய உபாயமொன்று நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். முன்னேறிச் செல்வதற்கான சாத்தியமுள்ள வழிகளாக கீழ்வரும் துறைவாரியான முன்னுரிமைகளும் முக்கிய துறைகளும் இனங்காணப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **வேளாண்மை:** வீட்டலகுகளின் மீளெழுச்சி மற்றும் உணவுப் பாதுகாப்பினை எய்துதல், பரந்தளவான உற்பத்தியாக்க மேம்பாட்டினூடாக இலாபகரமானதும் நீடித்துநிலைத்திருக்கக் கூடியதுமான வேளாண்மை உற்பத்தியினை அதிகரித்தல் என்பன மீது முதலீடுகளை மேற்கொள்ளுதல் மற்றும் நீடித்துநிலைத்திருக்கக் கூடிய வேளாண்மையினைப் பாதிக்கக்கூடிய நீர் போன்ற இடர்நேர்வுகளைக் குறைத்தல் வேண்டும்.

- **கைத்தொழில்:** ஏற்கனவேயுள்ள திறன்கள் மற்றும் இயலுமையைச் சரியான விதத்தில் கட்டியெழுப்புவதற்கு உள்நாட்டு வளங்களை பயன்படுத்தும் சிறிய கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதில் கவனம் செலுத்துதல் வேண்டும். இவ்வாறு கவனம் செலுத்துவதற்கு பரிந்துரைக்கப்பட்ட கைத்தொழில்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன: பெறுமதி சேர்ப்பிற்கு ஏற்றவிதத்தில் வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட பதனிடல்கள், கைவினையினை அடிப்படையாகக் கொண்ட தொழில்கள், இலகு தயாரிப்புகள் மற்றும் புதுப்பிக்கக்கூடிய வலு.

- **சேவைகள்:** நிதிச்சேவைகள், பொதுப்போக்குவரத்து, கவனிப்புச் சேவைகள், நீர் மற்றும் சுகாதாரம் போன்ற துறைகளின் உள்ளூர் தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய சேவைகளை மீள்சிந்தனைக்குட்படுத்தி விரிவாக்கம் செய்தல். தகவல் தொழிநுட்பம் மற்றும் சுற்றுலாத்துறைகளின் நீண்டகால ஆற்றல்வாய்ந்த தன்மையை மேலும் கண்டறியப்படவேண்டும் என்பதுடன் இவ்வளர்ச்சியை வலுப்படுத்த தெற்கிலுள்ள அனுபவம் நிறைந்த நிறுவனங்களிலிருந்து எச்சரிக்கையுடன் கூடிய ஆதரவும் தேவைப்படக்கூடும்.

- போரினால் சீரழிக்கப்பட்ட சமூகத்தின் நிறைவேற்றப்படாத குறிப்பிட்ட தேவைகளைச் சரியான தகவல்களின் அடிப்படையில் நீண்ட கால ரீதியில் திட்டமிடுவதற்கும் இணைப்பதற்குமாக **வடபகுதி திட்டமிடல் பணியகமொன்றினை** உருவாக்குவதற்கும் விதந்துரைக்கப்பட்டிருக்கிறது. அத்தகைய தேவைகள் நீண்டகால அபிவிருத்தி நிதியிடலைப் பெற்றுக்கொள்ளுதல், தொழிற்சந்தை விரிவாக்கம், இயற்கை வள முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி பெறுபேறுகளைக் கண்காணித்தல் போன்றவற்றை உள்ளடக்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. அறிமுகம்

### நோக்கமும் செயற்பரப்பும்

இப் 'பொருளாதார அபிவிருத்தி முதன்மைத் திட்டமொன்றிற்கான கட்டமைப்பு' இன் நோக்கம் இலங்கை, வட மாகாணத்தின் எதிர்காலத்திற்கான நீண்ட கால வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான 'திட்ட வரைவு' ஒன்றினை உருவாக்குவதற்கான யதார்த்தமானதும் இயக்கவாற்றல்மிக்கதுமான கருவியொன்றாக இருப்பதேயாகும். கடன்சுமை நெருக்கடி, உள்ளூர் மக்களுக்கான வேலைவாய்ப்பும் வருமானமும் போதுமானளவில் கிடைப்பதில் காணப்படும் குறைபாடுகள் என்பவற்றை உள்ளடக்கிய வகையில் போருக்குப் பின்னரான அபிவிருத்தித் திட்டங்கள் வட பொருளாதாரத்தை மீள கட்டியெழுப்புவதற்கு போதுமானதாக இல்லாதமையினை அங்கீகரிக்கும் விதத்தில், இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரின் வேண்டுகோளினடிப்படையில் அத்தகைய கட்டமைப்பினை அபிவிருத்தி செய்வதற்காக குழுவொன்று நிறுவப்பட்டது.

குறிப்பாக உற்பத்தி, வளர்ச்சி மற்றும் பங்கீடு ஆகியனவற்றுக்கிடையிலான இயக்கவாற்றல் மிக்க தொடர்பு முறைகளின் அடிப்படையில் அபிவிருத்திக் கொள்கைகள் மற்றும் உபாயங்களின் வடிவமைப்பினை மேற்கொள்வதற்கு வடக்கு பொருளாதாரத்தின் பேரண்டப் பொருளாதார பகுப்பாய்வுகள் போதுமானவையாக இல்லை. அபிவிருத்தியின் பெறுபேறுகள், சவால்கள் மற்றும் வாய்ப்புக்கள் போன்றவற்றை பகுப்பாய்வு செய்வதனூடாக பொருளாதார அபிவிருத்திக்கான புதிய 2030 தொலைநோக்கினையும் நெறிப்படுத்தலையும் உருவாக்குவதனை இக்கட்டமைப்பு நோக்கமாகக் கொண்டிருந்ததுடன் எதிர்கால முதன்மைத் திட்டத்தில் உள்ளடக்கப்படுவதற்கான முக்கியமான துறைகளையும் வழங்கியது.

இந்த அறிக்கையானது முக்கிய மூன்று பங்களிப்புக்களை வழங்குவதனை இலக்காகக் கொண்டுள்ளது:

1. ஒரு தனித்துவமான கொள்கை அணுகுமுறையின் அவசியத்தை வேண்டிநிற்கும் வடபகுதிப் போரின் காரணமான எச்சங்கள் அபிவிருத்திப் பிரச்சினைகள் மற்றும் சவால்களை முன்னிலைப்படுத்துவதற்கு முற்படுகின்றது.
2. இந்த அறிக்கையானது, குழு அங்கத்தவர்களின் உள்ளூர் தொடர்பான அறிவு, வலையமைப்பு மற்றும் ஆராய்ச்சிகளிலிருந்தான நுண்ணறிவுடன் சேர்த்து வரையப்பட்ட வடக்கு தொடர்பான பார்வையினது கோணத்தினை வழங்குகின்றது.
3. இக்கட்டமைப்பானது ஒரு முன்னோக்கிய பார்வையைக் கொண்டதாக விளங்குகிறது இது, பொருளாதாரத்தின் முழுமையான பேரண்ட பார்வையைக் கவனத்திற் கொண்டிருப்பதுடன் நடுத்தர காலத்திலிருந்து நீண்ட காலத்திற்கான (2030) அபிவிருத்திக்குரிய செல் நெறியொன்றினையும் வழங்குகிறது.

இக்கட்டமைப்பானது, கொள்கை வகுப்போர், நடைமுறைப்படுத்தும் முகவர்கள், கொடையாளர்கள் மற்றும் வடக்கிற்கான எதிர்கால பொருளாதார அபிவிருத்தி வடிவமைப்பு மற்றும் திட்டமிடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்முறையில் பங்களிப்போருக்கும் ஒரு பொக்கிஷமாக அமைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. எதிர்கால பங்களிப்பு மற்றும் அபிவிருத்தி முயற்சிகளின் சொத்தாண்மையினை ஊக்குவித்தல் தொடர்பாக மாகாணத்தினுள் கலந்துரையாடல்களை உருவாக்குவதற்கு இந்த அறிக்கை பயன்படுத்தப்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

வடபகுதிப் பொருளாதாரம் தொடர்பான ஒரு முழுமையான ஆய்வில் நாட்டம் கொள்வது குழுவின் வேலையாக இல்லை. ஏனைய அரச மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் இதனை மேற்கொள்வதற்கு சிறந்த நிலையிலுள்ளன. இக்குழுவின் தலையீடானது, போரினால் சூறையாடப்பட்ட பொருளாதாரம் மறுசீரமைக்கப்படுவதற்கான சவால்களை பரந்தளவில் பகுப்பாய்வு செய்வதனையும் அபிவிருத்தி செயன்முறை மற்றும் மூலக்கூறில் உள்ள பிரதான இடைவெளியினை சுட்டிக்காட்டுவதனையும் நோக்காகக் கொண்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அலுவலக (கிளிநொச்சி) முகாமையாளரைத் தலைவராகக் கொண்டு நிபுணர்கள், கல்வியியலாளர்கள், வல்லுனர்கள், அறிவு, திறன் மற்றும் வடமாகாண பொருளாதார அபிவிருத்தி சார் அனுபவம் என்பவற்றைக் கொண்ட தொழில்சார்நிபுணர்களை உள்ளடக்கிய ஒரு சுயாதீனகுழு உருவாக்கப்பட்டது. இக்குழு 2018 பெப்புருவரி முதல் ஓகத்து வரையிலான காலப்பகுதியில் தன்னார்வ ரீதியில் பணியாற்றியுள்ளது.

## அணுகு முறையும் ஆய்வு முறையியலும்

வடபகுதி பொருளாதாரத்தின் பல்வேறுபட்ட துறைகளை ஆய்வு செய்வதற்காக ஒரு கருப்பொருள் சார்ந்த அணுகுமுறை பயன்படுத்தப்பட்டுள்ளது. முதலாவது, போருக்குப் பின்னரான பொருளாதார பெறுபேறுகளைப் பகுப்பாய்வு செய்வதில் முக்கியமானது எனக் கருதப்படுகின்ற முக்கிய கருப்பொருளின் பொதுநோக்கும் அபிவிருத்திச் செயன்முறையும் பரீட்சிக்கப்பட்டன. இவை வேளாண்மை, கைத்தொழில், சேவைகள் மற்றும் சமூக மற்றும் பௌதிக உட்கட்டுமானங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளன. இரண்டாவதாக, அடுத்த தசாப்த காலத்தில் கட்டுப்படுத்தப்பட வேண்டிய முக்கியமாக குறிப்பிடப்படக்கூடிய சவால்களாக நடைமுறை அபிவிருத்தி முன்னெடுப்புக்களின் இடைவெளிகள் இனங்காணப்பட்டன. இவை மனிதவள அபிவிருத்தி, இளையோர் பிரச்சினைகள், பகுதித்திட்டமிடல், வங்கி மற்றும் நிதி, அபிவிருத்தி முகவர்களிடையேயான ஒருங்கிணைப்பு மற்றும் தொழில்நுட்ப பயன்பாடு என்பவற்றை உள்ளடக்குகின்றன.

மேலே குறிப்பிடப்பட்டவை ஒரு முழுமையான பட்டியலாக இல்லாவிட்டாலும் கூட, அவை நீண்ட கால அபிவிருத்தி முயற்சிகளை கட்டமைத்தல் தொடர்பான கடந்தகால விவாதங்கள் மற்றும் அண்மைய ஆண்டுகளில் இடம்பெற்ற உள்ளூர் கலந்துரையாடல்களினை உள்ளடக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளன. இந்த அறிக்கையானது குழு அங்கத்தவர்களின் அனுபவங்கள், ஆய்வுகள் மற்றும் அறிவினால் மேலும் மேம்படுத்தப்பட்டதுடன், ஐந்து வடபகுதி மாவட்டங்களுக்கும் விஜயம் செய்தமையின் மூலம் அங்குள்ள பொருளாதார அபிவிருத்திப் பொறுப்புக்கள் மற்றும் அத்துடன் ஈடுபாடுகளைக் கொண்ட ஆர்வலர்களுடனான ஆலோசனைகள் இதற்கு மேலும் உதவுவதாக அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வலுவான அபிவிருத்தி நோக்கு**

போரிலிருந்து தப்பிவரும் ஒரு சமுதாயத்தின் தேவைகளுக்கு புதிய அணுகுமுறையொன்றை வரைகின்ற அதேவேளையில் மாற்றமடைந்து வருகின்ற வலுவான அபிவிருத்தியொன்றை நோக்கிய புதியதொரு பாதையை தேசிய கொள்கைகள் மற்றும் முற்போக்கான சர்வதேச நியமங்களின் அடிப்படையில் வரைந்து கொள்ளமுடியும். ஐக்கிய நாடுகள் சபையின் 2030ஆம் ஆண்டிற்கான நீடித்தநிலையான அபிவிருத்திக்கான நிகழ்ச்சிநிரலின் கையொப்பதாரரான இலங்கை தனது 17 உலகளாவிய நீடித்துநிலைத்திருக்கக் கூடிய அபிவிருத்தி இலக்குகளை (SDGs) அடைவதற்கான கடப்பாட்டினைக் கொண்டுள்ளது. தேசிய கொள்கையானது இந்நிலைபேறுடைய அபிவிருத்தி இலக்குகளில் 5இன் மீது சிறப்புக் கவனத்தைச் செலுத்தி வருகின்றது. அவையாவன: வறுமையின்மை, தரமான கல்வி, புதுப்பிக்கப்படத்தக்க சக்தி வளம், சமனிலையற்ற தன்மையைக் குறைத்தல் மற்றும் நிலைத்துநிற்கக்கூடிய நகரங்கள் மற்றும் சமூகங்கள். அரசாங்கத்தின் பொது முதலீட்டுத் திட்டம் (PIP) 2017 – 2020 இன் பொருளாதார உபாயம் அதன் ஏழு கூறுகளில் நான்கினை பிரதிபலிக்கின்றது: அவையாவன, மனித வளத்தின் தரத்தினை மேம்படுத்தல், பொருளாதார மற்றும் சமூக துறைகளில் சமத்துவத்தை மேம்படுத்தல், பிராந்திய ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல் மற்றும் சுற்றுச்சூழலையும் இயற்கை வளங்களையும் பாதுகாத்தல் என்பனவாம். வடமாகாணத்தில் பலப்படுத்தப்பட வேண்டிய அபிவிருத்தியான கூடிய பரந்த சமூகத் தளத்துடன் இணைந்த வகையில் இத்துறைகள் நன்கு இணைக்கப்பட்டுள்ளன.

மேலே கூறப்பட்டவற்றின் வழிகாட்டலுடன் "சுபீட்சம் மிக்க சமத்துவமான வட மாகாணத்தை" உருவாக்கும் தொலைநோக்குடன் இக்கட்டமைப்பினை உருவாக்குவதனை இக்குழு முன்னெடுத்துள்ளது. அபிவிருத்தியை அணுகுவதனைப் பொறுத்தவரை உயரளவான உற்பத்தித்திறன், பொருளாதார வளர்ச்சி என்பவற்றை அடைந்து கொள்ள வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து கொண்ட குழு உள்ளூர் வளங்களை சுற்றுச்சூழல் பாதிக்கப்படாத விதத்தில் நிலையான முறையில் பயன்படுத்துவதனை ஏற்றுக்கொண்டது. அடுத்த தசாப்த காலப்பகுதியில் பொருளாதார அபிவிருத்தியானது சமத்துவமின்மை, சமூக ரீதியில் ஒதுக்கப்பட்ட தன்மை மற்றும் பின்தங்கிய நிலையிலுள்ள பல்வேறுபட்ட மக்கள் தொகை, நகர்ப்புற - கிராமப்புற இடைவெளி மற்றும் சமச்சீரற்ற அபிவிருத்தி என்பவற்றை உள்ளடக்கிய வகையில் தற்போது நிலவுகின்ற சமூக - பொருளாதார கட்டமைப்பை பொறுத்து மாற்றமடையும். மேலும் போரினால் பாதிக்கப்பட்ட சமுதாயம் என்ற முறையில் பல தசாப்தங்களாக பாதிப்பு நிறைந்ததும் ஆபத்தானதுமான வாழ்க்கைக்கு பின்னர் சமூக மீளெழுச்சியை மீண்டும் கட்டியெழுப்பும் போது அபிவிருத்தியின் முக்கிய முயற்சிகள் உலகளாவிய ரீதியில் வருமானம் மற்றும் மனித வளர்ச்சி சுட்டிகளினை மேம்படுத்திக்காட்டுவது அவசியமாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. வடக்கு பொருளாதாரச் சூழமைவு

### சுதந்திரத்திற்குப் பின்னரும் போருக்கு முன்னருமான காலப்பகுதி

வரலாற்று காலத்தில் யாழ்ப்பாணம் காலணித்துவத்தின் போது அரச பணியில் பணியாற்றிய நடுத்தர வர்க்கத்தினரின் பணவனுப்பல் பொருளாதாரத்துடனும் கல்வியியல் நிறுவனங்களுடனும் இணைந்த விதத்தில் செழிப்புற்றுக் காணப்பட்டவிடத்து சிறு உடமை வேளாண்மை சமூக ஆதிக்கத்திற்குட்பட்டதாக காணப்பட்டது. 1948இல் சுதந்திரமடைந்த காலத்திலிருந்து 1980களின் நடுப்பகுதியில் யுத்தம் ஆரம்பிக்கப்பட்டது வரையான போருக்குப் முன்னரான தசாப்த காலப்பகுதியில் வடமாகாணத்தின் அரசியல் பொருளாதாரம் கணிசமானளவு மாற்றங்களைக் கடந்து வந்திருக்கிறது.

1960களில் யாழ்ப்பாணத்தில் குடித்தொகை அழுத்தம் அதிகரித்தமையின் காரணமாக வன்னிப் பெருநிலப்பரப்பின் சனத்தொகையானது வரண்ட பிரதேச வேளாண்மை அபிவிருத்திக்கான கொள்கைகளினால் தோற்றம் பெற்ற குடியமர்த்தல் செயற்பாட்டின் மூலம் அதிகரித்தது. இது நீர்ப்பாசன திட்டங்களின் மேலதிக விருத்திக்கு வழிவகுத்ததுடன் நெல் உற்பத்தியும் அதிகரித்தது. தென்பகுதியில் காலத்திற்குக் காலம் ஏற்பட்ட இன வன்முறையினால் இடம்பெயர்ந்த மலையக தமிழர்கள் வன்னிக்கு மீளக்குடியமர்ந்தனர். முக்கியமாக, இவ்விடம்பெயர்ந்த குடித்தொகையினர் காணிகள் அற்றவர்களாகவும் பண்ணை தொழிலாளர்களாகவும் காணப்படுகின்றனர். குறைந்தளவிலான கல்வி மற்றும் தொழில் வாய்ப்புக்களின் காரணமாக ***வன்னி மாவட்டங்கள் தொடர்ந்தும் அபிவிருத்தியடையாத நிலையில் காணப்படுகின்றன.***

வடமாகாணத்தின் சனத்தொகையில் அதிகளவானோர் வாழ்கின்ற யாழ்ப்பாணத்தில் இறக்குமதிப் பதிலீட்டுக் காலப்பகுதியில் சிறுஉடமை வேளாண்மையாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட சின்ன வெங்காயம், மிளகாய் போன்ற காசுப் பயிர்களின் அதிகரித்த பயிர்ச்செய்கை மற்றும் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி போக்கிலான மீன் உற்பத்தி என்பன வேளாண்மையின் செழிப்பிற்கு வழிவகுத்தன. 1960 கள் மற்றும் 1970களில் ஏற்பட்ட இம்முன்னேற்றமானது யாழ்ப்பாணத்தின் கிராமிய தாழ்ந்த, நடுத்தர வகுப்பினருக்கான சிமெந்து வீடுகள், நுகர்வோர் மற்றும் உற்பத்தியாளர் கூட்டுறவினைப் பலப்படுத்தல் மற்றும் யாழ்ப்பாணம் மற்றும் தீபகற்பத்தின் சிறிய நகரங்களின் நகர அபிவிருத்தி போன்ற சமூக முன்னேற்ற நடவடிக்கைகளில் பிரதிபலித்தது. சீமெந்து, உப்பு மற்றும் இரசாயன உற்பத்திகளை மேற்கொள்ளும் அரச கூட்டுத்தாபனங்கள், அச்சுவேலி கைத்தொழில் பேட்டை போன்ற அரசாங்கத்தினால் வளர்த்தெடுக்கப்பட்ட சிறிய கைத்தொழில்கள், கூட்டுறவினால் கட்டியெழுப்பப்பட்ட புடைவைக் கைத்தொழில் என்பன யாழ்ப்பாணத்தில் ***வரையறுக்கப்பட்ட தொழிலாளர் தளத்துடன் சிறு கைத்தொழில் துறையின் தோற்றத்திற்கு வழிவகுத்தன.*** கடலுணவு, காசுப் பயிர்கள் மற்றும் புடைவைகள் என்பவற்றிற்கான போக்குவரத்து, யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பிற்கான மற்றும் தேசிய வர்த்தக நிலையங்களினை இணைக்கின்ற வீதி மற்றும் புகையிரத சேவைகளினால் வசதிப்படுத்தப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**போர் தசாப்தங்கள்**

போருக்கு முன்னரான உடனடுத்த காலப்பகுதியில், வடபகுதி தலைசிறந்த கல்வியியல் நிறுவனங்கள், சுபீட்சம் நிறைந்த தொழில்சார்நிபுணத்துவ வர்க்கத்தினர், செழிப்பான வேளாண்மைப் பொருளாதாரம் மற்றும் ஆரம்பிக்கப்பட்ட கைத்தொழில் துறை போன்ற தன்மைகளைக் கொண்டிருந்தது. போர் நிலைமை அதிகரித்தமையின் காரணமாக இத்தகைய சமூக பொருளாதார உத்வேகத்திற்கு இடையூறு விளைவிக்கப்பட்டதுடன் இளைஞர்கள் மற்றும் தொழில்சார்நிபுணர் வல்லுநர் வர்க்கங்கள் மேற்குலக நாடுகளிற்கு வெளியேறினர். இறுதியாக, ***பெருவாரியான வெளியேற்றம் மற்றும் உள்ளக இடப்பெயர்வுகள் என்பன வடக்கில் சனத்தொகை கணிசமானளவு குறைவடைவதற்கு வழிவகுத்தன.***

இடப்பெயர்வு மற்றும் போர்க்காலக் கட்டுப்பாடுகளினால் வேளாண்மை, மீன்பிடி மற்றும் சிறிய கைத்தொழில்கள் என்பன முழுமையாக சீர்குலைந்தன. குறைந்தளவிலான உற்பத்தி மற்றும் திரட்சி என்பவற்றின் காரணமாக புதிய உற்பத்தி வசதிகளை கட்டியெழுப்புவதற்கோ அல்லது தரமுயர்த்துவதற்கோ சிறியளவிலான மூலதனமே காணப்பட்டது. ஏ9 பிரதான வீதி மூடப்பட்ட பின்னர் உள்நாட்டு மற்றும் பன்னாட்டுச் சந்தை இணைப்புக்கள் முற்றாகத் துண்டிக்கப்பட்டதுடன் அத்தியாவசியப் பொருட்கள் உள்நாட்டு விற்பனைக்கு அல்லது சுயபயன்பாட்டிற்காக மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டன. ***சிறுவர்கள், இளைஞர்கள் மற்றும் தொழில்புரிவோரது கல்வி மற்றும் தொழில்கள் பல தலைமுறைகளாகத் திரும்பத்திரும்ப சீர்குலைக்கப்பட்டன.*** மேலும், ஒரு சிலரே கல்விமான்களாக, முகாமையாளர்களாக, அடுத்த தலைமுறையினரை வழிநடத்தக்கூடியவர்களாக இருந்தமையானது தலைமுறைகளிடையே இடைவெளியினை உருவாக்கியது.

**போருக்குப் பின்னர் இன்று வரையான காலம்**

முப்பது வருட யுத்தத்திற்குப் பின்னர், அழிவடைந்த அல்லது அபிவிருத்தியடையாத உட்கட்டமைப்பு, அழிவடைந்து போன சமூக நிறுவனங்கள் மற்றும் மனிதவளங்கள் போன்ற நியதிகளில் சமூக பொருளாதார சவால்கள் மிகக் கடினமானவையாகக் காணப்பட்டதுடன் நாட்டின் ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடுகையில் பின்னடைந்தும் காணப்பட்டன. போர் முடிவடைந்தவுடன், ***நன்கு முன்னேற்றங்கண்ட உற்பத்திகளுடன் கூடிய பரந்த சந்தையை அடையும் விதத்தில் வீதி இணைப்புக்கள் மீள திறக்கப்பட்டமையால் உள்ளூர் உற்பத்திகள் சந்தைச் சக்திகளின் அதிர்வுகளிற்குள்ளாகின.*** இதனடிப்படையில், உட்கட்டமைப்பினைக் கட்டியெழுப்பும் போருக்குப் பின்னரான மீள்கட்டுமான உபாயம், கொடுகடன் விரிவாக்கம் மற்றும் கடன்களினால் நிதியீட்டம் செய்யப்பட்ட வாழ்வாதார மற்றும் சுயதொழிலைக் கட்டியெழுப்பியமை என்பவற்றினால் போரிலிருந்து படிப்படியாக மீண்டுவரும் குடித்தொகை தங்களது மிகக் குறைவான சொத்துக்களில் தங்கியிருக்க முடியாதநிலை ஏற்பட்டு இது இறுதியில் பரந்தளவிலான கடன் நெருக்கடி மற்றும் கிராமிய பொருளாதார நெருக்கடிக்கு வழிவகுத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒரே பார்வையில் வடமாகாண புள்ளிவிபரங்கள்[2]**

| | குறிகாட்டிகள் | வடமாகாணம் | தேசிய |
|---|---|---|---|
| 1 | குடித்தொகை | 1,090,000 | 20,660,00 |
| 2 | வீட்டுத்துறை | 268,000 | 5,437,000 |
| 3 | சராசரி வருமானம் (ரூ.) | 34,500 | 43,511 |
| 4 | வறுமை எண்ணிக்கைச் சுட்டெண்[1] | 7.7 | 4.1 |
| 5 | 2016 மொத்த உள்நாட்டு உற்பத்தி பங்களிப்பு (மில்லியன் ரூ.) | 497,950 | 11,906,752 |

1 வறுமை எண்ணிக்கை சுட்டெண், வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் சனத்தொகையின் சதவீதமாக வரைவிலக்கணம் செய்யப்படுகிறது.

2 விடயங்கள் 1 – 4 ஜவீட்டலகுகள் மற்றும் வருமான செலவின அளவீடு (2016)ஸ் விடயம் 5 [,லங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை 2017]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. போருக்குப் பின்னரான மீள்கட்டுமானக் கொள்கைகளும் அவற்றின் சவால்களும்

காலங்கடந்த தொழில்நுட்ப பயன்பாடு, பின்தங்கிய உற்பத்தியாக்கம் மற்றும் தாழ்ந்த பொருளாதாரத் தளம் என்பன போர் முடிவில் வடக்குப் பொருளாதாரத்தினை தற்போது நிலவும் பாதிக்கப்பட்ட, நலிவுற்றநிலைக்கு இட்டுச்சென்றன. மீட்சி, மீள்கட்டுமானம் மற்றும் புனரமைப்பு என்பன மீதான உடனடிக் கவனம் 2010 இற்கும் 2012 இற்குமிடையே மாகாண பொருளாதார வளர்ச்சி வீதத்தினை உத்வேகமடையச் செய்தது[3]. இவ்வதிகரிப்பிற்கு, வேளாண்மைத்துறை நடவடிக்கைகளினை மீள ஆரம்பிப்பதில் 60 சதவீத குடித்தொகையினர் ஈடுபட்டமை, கண்ணி வெடியகற்றல், காணி விடுவித்தல் மற்றும் கடலோர மீன்பிடிக் கட்டுப்பாடுகளின் நீக்கம் என்பன முக்கிய காரணிகளாகும்.

போருக்குப் பின்னரான நடுத்தர கால அபிவிருத்தி உபாயங்கள் பின்வருவன தொடர்பான அரச கொள்கைகள் மற்றும் முதலீடுகள் மீது கவனம் செலுத்தின:

- **உட்கட்டமைப்பினைத் தூண்டும் அபிவிருத்தி:** ஆரம்பத்தில் பொருளாதார அபிவிருத்திக்கான அடித்தளமாகவும் உபாயமாகவும் உட்கட்டமைப்பின் மீள்கட்டுமானத்திற்கு அதிக முக்கியத்துவமளிக்கப்பட்டது[4].
- **கிராமிய அபிவிருத்திக்கான கொடுகடன் விரிவாக்கம்:** சுயவேலை வாய்ப்பு மற்றும் வாழ்வாதாரத்தினை வலுப்படுத்தும் திட்டங்களுக்கு அரச கொடைகளினால் உதவுதொகை வழங்கப்பட்டதுடன் கிராமிய சமூகத்தினரின் வருமான உருவாக்கங்களுக்காகப் பரந்த அடிப்படை அபிவிருத்திக் கொள்கையொன்றாகக் குறைந்த வட்டி வீதக் கடன்கள் ஊக்குவிக்கப்பட்டன.
- **அபிவிருத்திக்கு வழிவகுத்த தனியார் துறைக்கான வரி ஊக்குவிப்புக்கள்:** உள்நாட்டு, புலம்பெயர்ந்த மற்றும் வெளிநாட்டுத் தனியார் துறை முதலீடுகளினை ஊக்குவிப்பதற்காக வரி விலக்குகள் மற்றும் சலுகைகள் வழங்கப்பட்டதுடன் அத்தியாவசிய உட்கட்டமைப்பு மற்றும் வியாபார நட்புறவான சூழல் உருவாக்கப்பட்டதன் பின்னர் வடக்கில் புதிய கைத்தொழில்கள் மற்றும் பணிகள் வேலைவாய்ப்புக்களைத் தோற்றுவிக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

மாகாண மட்டத்தில், இத்தகைய உபாயங்களின் பெறுபேறுகள் எதிர்பார்ப்புக்களினை விடக் குறைந்த மட்டத்திலேயே அடையப்பட்டன. ஒட்டுமொத்தத்தில், 2012 இற்குப் பின்னர் மாகாண வளர்ச்சி வீதம் மெதுவடைந்தது[5]. 2017ஆம் ஆண்டில், நாட்டின் கைத்தொழில் முயற்சியாண்மைகளில் வடமாகாணம்

---

3 2012இல் வடமாகாணம் 25.9 சதவீதம் மாகாண ரீதியான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியினைப் பதிவு செய்து, தேசிய பொருளாதாரத்திற்கு 2010இன் 3.4 சதவீதத்திலிருந்து 4.0 சதவீதத்திற்குப் பங்களித்துள்ளது வடமாகாணத்தின் சராசரி மாகாண மொத்த உள்நாட்டு உற்பத்தி 25.2 சதவீதமாகும். இது 2010 தொடக்கம் 2012 வரையான காலப்பகுதியில் தேசிய சராசரி வீதமான 16.2 இனை விடவும் உயர்வானதாகும். [நிதியமைச்சு ஆண்டறிக்கை 2013]

4 2009 தொடக்கம் 2013 வரையான காலப்பகுதியில் வடமாகாணத்தில் நெடுஞ்சாலைகள், புகையிரதப்பாதைகள், நீர்வழங்கல், நீர்ப்பாசனம், வீடமைப்பு, வைத்தியசாலைகள், பாடசாலை வசதிகள் மற்றும் நிர்வாகக் கட்டடங்கள் என்பவற்றை மீள்கட்டியெழுப்புவதற்காக ரூ.221 பில்லியன் பெறுமதியான அனைத்தையுமுள்ளடக்கிய உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டமொன்று செயற்படுத்தப்பட்டது. இது 2011இல் வடமாகாண மொத்த உள்நாட்டு உற்பத்தி ரூ.243 பில்லியனாக அறிக்கையிடப்பட்ட காலத்தில் இடம்பெற்றது. [நிதியமைச்சு ஆண்டறிக்கை 2013 இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக புள்ளிவிபரங்கள் 2017: இலங்கை மத்திய வங்கி]

5 2016இல் தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு வடமாகாண மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பங்களிப்பு 4.2 சதவீதமாகும். 2012 இற்குப் பின்னரான அதிகரிப்புக்கள் பிரதானமாக கட்டுமானக் கைத்தொழில் மற்றும் வர்த்தகம் மற்றும் போக்குவரத்து போன்ற சேவைகளிலிருந்து கிடைத்தன [இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக புள்ளிவிபரங்கள் 2017: இலங்கை மத்திய வங்கி].



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகக் குறைந்த எண்ணிக்கையைக் கொண்டிருந்ததுடன்[6] முதலீட்டுச் சபையில் 23 முயற்சியாண்மைகள் பதிவுசெய்யப்பட்டிருந்தன. இதில் ஒன்று மட்டுமே புலம்பெயர் நிதியீட்டத்தினாலானது. வடமாகாண கைத்தொழில் துறை தேசிய சராசரியிலும் பார்க்க மிகக்குறைவான மட்டங்களிலேயே தொடர்ந்தும் விரிவடைந்து செல்கின்றதுடன்[7] தொழில் வாய்ப்புக்களும் திருப்திகரமான மட்டங்களில் உருவாக்கப்படவில்லை[8]. இது யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சனத்தொகையின் நலனோம்புகை மீது எத்தகைய விளைவினைக் கொண்டுள்ளது என்பதே முக்கிய கரிசனையாகும். முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்கள் நாட்டில் குறைந்த மாதாந்த வருமானங்களை அறிக்கையிட்டுள்ளன[9]. அதிகரித்த தற்கொலைகள் அல்லது தற்கொலை முயற்சிகள் உள்ளடங்கலாக கடன் நெருக்கடி நிலை விரைவாக வளர்ச்சியடைந்தது. வன்னி மாவட்டங்களின் சிறுவர்களின் ஆரோக்கிய நிலை மோசமடைந்து ஆபத்தான வீதங்களிற்குத் தள்ளப்பட்டதுடன்[10] தொழிற்படையில் பெண்களின் பங்களிப்பு வீதம் தேசிய சராசரியை விட மிகவும் கீழ் நிலையில் காணப்படுகின்றது[11].

அபிவிருத்தி பெறுபேறுகளின் பின்னடைவிற்கான காரணங்களை ஆழமாக ஆராய்ந்து பார்க்கையில் போரினால் அழிவடைந்த வடக்கிற்கான முக்கிய பேரண்டப் பொருளாதார அம்சங்கள் மற்றும் குறிப்பிடப்பட்ட சமூக பொருளதாரச் சவால்கள் என்பன கொள்கை உருவாக்கத்தின் போது போதியளவில் கருத்தில் கொள்ளப்படவில்லை என்பதனையே அவை புலப்படுத்துகின்றன.

முதலாவதாக, தற்போதைய பொருளாதார கட்டமைப்பானது சிறுஉடமை வேளாண்மையாளர்கள், சிறியளவிலான மீனவர்கள் மற்றும் சிறிய கைத்தொழில்கள், வியாபாரங்கள் மற்றும் கூட்டுறவுகள் போன்ற ***'சிறியளவிலான' பொருளாதார முகவர்களினால் தொடர்ச்சியாக ஆதிக்கம்*** செலுத்தப்பட்டு வருகிறது. போட்டித்தன்மையினைக் கொண்டிராத அத்தகைய வடமாகாண உற்பத்தியாளர்கள் நாட்டின் ஏனைய பகுதி சந்தைகளுடன் திடீரென இணைக்கப்பட்டமையினால் கணிசமானளவு பொருளாதார ரீதியான நட்டத்தை எதிர்கொண்டனர். சிறிய உற்பத்தியாளர்களின் உற்பத்தித்திறன் மற்றும் வினைத்திறனை அதிகரிப்பதற்கு முறையியல் சார்ந்த முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்த பிரதேசத்தின் காலவரையறைக்குட்பட்ட அரச உத்தரவாதமளிக்கப்பட்ட பாதுகாப்பிற்கான

---

6 மேலும், நாடு முழுவதிலுமுள்ள 5,332 கைத்தொழில் முயற்சியாண்மைகளில் 34 (0.6 சதவீதம்) மட்டுமே வடக்கில் அமைந்துள்ளது [இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை 2017].

7 2011 மற்றும் 2015 இற்கிடையில் வட மாகாண மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான கைத்தொழில் துறையின் சதவீதப் பங்களிப்பு அதிகரிப்பு 42 சதவீதமாகக் காணப்பட்டது. இது, 63 சதவீத தேசிய புள்ளிவிபரத்தை விடவும் நன்கு குறைவாகும். [இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக புள்ளிவிபரங்கள் 2017 : இலங்கை மத்திய வங்கி].

8 2011 – 2016 காலப்பகுதியில் வடக்கில் தொழிலமர்த்தப்பட்ட மக்களின் எண்ணிக்கையிலான மாற்றம் 54,096 ஆகும். இது அக்காலப்பகுதியின் 15 சதவீத அதிகரிப்பாகும் 2016இல் 24,000 மக்கள் தொழில் தேடுவார்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. [தொழிற்படை மதிப்பீடு, ஆண்டறிக்கைகள் 2011 மற்றும் 2016].

9 மாதாந்த வருமான சராசரி முறையே ரூ.25,562 மற்றும் ரூ.27,050 ஆகும். [வீட்டலகுகள் மற்றும் வருமானச் செலவு மதிப்பீடு (2016)]

10 சிறுவர் ஊட்டச்சத்து குறைபாட்டின் நியதிகளில், கிளிநொச்சி மாவட்டம் அதிகூடிய போதிய நிறையின்மை விகிதத்தையும் (34.9 சதவீதம்) இரும்புச் சத்துக் குறைபாட்டையும் (12.9 சதவீதம்) பதிவு செய்துள்ளது. [உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து, தேசிய உபாய மீளாய்வு, உலக உணவுத் திட்டம் (2017)]

11 2016இன் 36 சதவீதம் தேசிய சராசரிக்கு மாறாக பெண்கள் தொழிற்படைப் பங்கேற்பு 25 சதவீதமாக அறிக்கையிடப்பட்டுள்ளது. [தொழிற்படை மதிப்பீட்டு ஆண்டறிக்கை 2016]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் கட்டாயக் காரணி இதற்கு முக்கியமானதொன்றாகும். ஆனால் அபிவிருத்தி முயற்சிகள் ஒன்றில் இக்குழுவினரைப் புறக்கணித்துள்ளன அல்லது அவர்களின் நிலைமாற்றுக் காலத் தேவைகளுக்குப் போதியளவில் வசதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை[12]. கட்டுமானப் பணிகள் மீதான அரச துறை அபிவிருத்தி நிதியீட்டங்கள் குறுங்கால தொழில்வாய்ப்பு மற்றும் வருமான அதிகரிப்பினை ஏற்படுத்தியுள்ள நிலையில், நீடித்துநிலைத்திருக்கும் வளர்ச்சிக்கான பொருளாதாரத்தின் நீண்டகால கட்டமைப்பு மற்றும் உற்பத்தி இயலளவு என்பவற்றில் மிக இன்றிமையாத மாற்றங்கள் அடையப்படவில்லை.

இரண்டாவதாக, உதவி வழங்குநர்கள் ஒருபடி மேலாக தெரிவு செய்யப்பட்ட கைத்தொழில்களில் புதிய அதிநவீனத்துவம் மிக்க தொழில்நுட்பங்களினை அறிமுகப்படுத்தியதன் மூலம் அல்லது புதிய வியாபாரங்களினை நிறுவ ஊக்குவித்தமையின் மூலம் உற்பத்தியில் பாய்ச்சலை ஏற்படுத்த முயன்றனர். எனினும், பிராந்தியத்தில் நிலவுகின்ற நிறுவன ரீதியான இயலுமை மற்றும் திறன்கள் பற்றி போதியளவிற்கு விளங்கிக் கொள்ளாமையினால் இம்முயற்சிகள் பெருமளவிற்கு வெற்றியளிக்கவில்லை. யுத்தம் காரணமாக பண வடிவிலான மூலதனம், தொழில்நுட்பம் இல்லாது போனதுடன் கல்விமான்கள் மற்றும் தேர்ச்சியுடைய தொழிற்படையின் வெளியேற்றத்திற்கும் அது காரணமாகியது. மூலதன செறிவுமிக்க இயந்திரங்களைப் பயன்படுத்துவதற்கு சிறிய வியாபாரங்களுக்குப் போதியளவு தொழிற்படு மூலதனம் இல்லாமை, தொழில் தேர்ச்சி, அனுபவம், ஆலோசனை வழங்கல் என்பன மூலம் பல தலைமுறை இடைவெளிகளை நிரப்புவது தற்போதுள்ள அத்தகைய தொழிற்பாடுகளுக்கான தேவையொன்றாக இருக்கிறது. இதற்கு உதாரணமாக ரூ.210 மில்லியன் செலவில் 2013 இல் அச்சுவேலியில் கைத்தொழில் பேட்டை 16 நடுத்தரளவிலான கைத்தொழில்களைக் கவரும் நோக்கில் அமைக்கப்பட்டமையைக் குறிப்பிடலாம். 2018 யூலை முடிவில், அங்கு மிகவும் குறைந்தளவிலான கைத்தொழில்களே காணப்பட்டன. அவற்றுள் அநேகமானவை பகுதியளவிலேயே இயங்குகின்றன.

மூன்றாவதாக, இவ்வபிவிருத்தி முன்னெடுப்புக்கள் அனைத்தும் **சமூக ரீதியாகப் பாதிக்கப்படக்கூடிய தன்மை இன்னமும் போதுமானளவிற்குக் கட்டுப்படுத்தப்படாத** போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காகவே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. கிராமப்புறங்களில் வாழும் 80 சதவீதமான குடித்தொகையினர் குறைவானதும் உத்தரவாதமில்லாதுமான வருமானத்தைப் பெறுகின்றனர். கல்வி தடைப்பட்டுள்ளது. போருடன் தொடர்புடைய உடல் மற்றும் உள ரீதியான பிரச்சினைகள் மீது பொருத்தமான விதத்தில் கவனம் செலுத்தப்படவில்லை. ஆயிரக்கணக்கான மக்கள் காணிகளற்ற நிலையிலுள்ளனர். அத்துடன் நலிவடைந்த நிலையிலுள்ள சமூக வலையமைப்புக்கள் மற்றும் நிறுவனங்கள் இன்னமும் பழையநிலைக்குக் கட்டியெழுப்பப்படவில்லை. இதனடிப்படையில், நுகர்வுத் தேவைகள் பூர்த்தி செய்யப்படாத மற்றும் சமூக பாதுகாப்பு வலையமைப்பு போதியளவு இல்லாத சூழ்நிலையொன்றில் வாழ்வாதாரம் மற்றும் சுயதொழில் வாய்ப்பிற்கான கொடைகள் மற்றும் கடன்களின் பொருத்தமற்ற பங்கீடு வீட்டலகுத் துறை நிதிகள் இலகுவில் பாதிக்கப்படக்கூடிய

12 உதாரணமாக, யாழ்ப்பாணத்தில் 50 சதவீதமான வீட்டலகுகள் வேளாண்மை வாழ்வாதாரத்தில் ஈடுபட்டுள்ள போதிலும் 2010 தொடக்கம் 2016 வரையான காலப்பகுதியில் யாழ் மாவட்ட செயலகம் அதனுடைய பொது முதலீட்டில் 2.4 சதவீதம் மட்டுமே வேளாண்மைத் துறையில் செலவிடப்பட்டுள்ளதாக மதிப்பிட்டுள்ளது. [யாழ் மாவட்ட ஐந்தாண்டு அபிவிருத்தி திட்டம் (2018)]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மைக்கு வழிவகுத்தன. நுண்பாகநிதி விரிவாக்கம் மற்றும் குத்தகை நடவடிக்கைகள் உள்ளூர் மீள்முதலீடுகளை ஊக்குவிப்பதற்குப் பதிலாக கிராமிய வருமானங்களை உறிஞ்சிக் கொண்டன.

இறுதியாக, வடக்கிற்கான ***போருக்குப் பின்னரான அபிவிருத்தி முன்னெடுப்புக்களில் அநேகமானவை எதிர்வினையானவைகளாகவும் சிறுசிறு அளவினதாகவும் காணப்படுகின்றன.*** பேரண்டப் பொருளாதார தொலைநோக்கு இல்லாமல் வடிவமைக்கப்பட்ட 'திட்ட அடிப்படையிலான' அபிவிருத்தி, தவறான அபிவிருத்திக் கொள்கைகள் மற்றும் ஒட்டுமொத்த ஒருங்கிணைப்பு இல்லாமை என்பனவே வடமாகாணத்தைப் பாதிக்கின்ற பொருளாதார நெருக்கடி நிலைக்கு முக்கிய காரணங்களாகும்.

ஒட்டுமொத்தத்தில், நிதி மற்றும் உட்கட்டமைப்பு பற்றாக்குறையே வடக்கில் பொருளாதார வளர்ச்சியை முன்னைய நிலைக்குக் கொண்டு செல்வதற்கான தடைகளாக இனங்காணப்பட்டுள்ளன. அத்தகைய ஆய்வுகள் பிரதேசத்தின் போருக்குப் பின்னரான எச்சங்களைப் புறக்கணித்துள்ளன. போருக்குப் பின்னரான சவால்களைக் கட்டுப்படுத்துகின்ற அதேவேளையில் வடமாகாணத்திற்கு **ஏற்றத்தாழ்வற்ற மற்றும் அனைத்தையுமுள்ளடக்கிய வளர்ச்சியினை** அளிக்கக்கூடிய புதிய நீடித்துநிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்தி மாதிரியொன்று அவசரமாக தேவைப்படுத்தப்படுகின்றது. கடந்த தசாப்தமாக நிறைவேற்றப்பட்டுள்ளவை மற்றும் நிறைவேற்றப்படாதவை என்பனவற்றிலிருந்து அறிவினைப் பெற்றுக்கொள்வது அத்தகைய மாதிரிக்கு அவசியமானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. பொருளாதார அபிவிருத்தி முதன்மைத் திட்டத்திற்கான கட்டமைப்பு

கடந்த தசாப்த காலத்தில் போருக்குப் பின்னரான அபிவிருத்திப் பாதையின் ஆராய்ச்சிகளின் வழிகாட்டல்கள் மற்றும் மேற்குறிப்பிட்ட நீடித்துநிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்தி தொலைநோக்கு என்பவற்றினடிப்படையில், இவ்வறிக்கையின் எஞ்சியுள்ள பகுதி வடமாகாணத்தின் அபிவிருத்திக்கான ஓர் புதிய பேரண்டப் பொருளாதார அணுகுமுறையினை அமைப்பதில் கவனம் செலுத்துகின்றது.

### பொருளாதார அபிவிருத்திக்கான கட்டமைப்பின் தூண்கள்

இக்கட்டமைப்பு நீடித்துநிலைத்திருக்கக்கூடிய பொருளாதார அபிவிருத்தியினைத் தூண்டக்கூடிய ஒன்றிலொன்று தங்கியுள்ள உற்பத்திக் காரணிகள், பொருத்தமான சூழல் மற்றும் அபிவிருத்திக்கான சமூக அழுத்தங்கள் ஆகிய மூன்று தூண்களினால் அமைக்கப்பட்டுள்ளமையினை வரைபடம் 1 காட்டுகின்றது. உற்பத்திக் காரணிகள், மாகாணத்தின் உற்பத்தி மற்றும் பொருளாதார வளர்ச்சியினை அதிகரிப்பதற்கான முக்கிய உள்ளீடுகளான மூலதனம், தொழிற்படை, நிலம் மற்றும் இயற்கை வளங்கள் பற்றி ஆராய்கின்றன. தற்போதைய உற்பத்திச் சூழல் அதன் எதிர்கால வளர்ச்சியில் கணிசமானளவு தாக்கத்தினைக் கொண்டுள்ளமையினால் இக்கட்டமைப்பானது உடனடியாக கவனம் செலுத்தப்பட வேண்டிய கூறுகளான தொழில்நுட்பம், உட்கட்டமைப்பு, சட்டம், நிறுவனங்கள் மற்றும் சந்தைகள் என்பவற்றின் வசதிப்படுத்தல் வகிபாகத்தினை இனங்கண்டுள்ளது. இறுதியாக, அபிவிருத்தியில் மக்களின் பங்கேற்பு ஆற்றலினை உறுதிப்படுத்தும் விதத்தில் சமூக அடித்தளங்களைக் குறிப்பாக உணவு மற்றும் போசாக்கு, சுகாதாரம், வாழ்க்கை நிலைமைகள் மற்றும் கல்வி என்பவற்றினைப் பலப்படுத்தும் விதத்தில் மக்கள் மீதான முதலீடு மேற்கொள்ளப்படல் வேண்டும் என வலியுறுத்துகிறது. ஒன்றுடனொன்று தங்கியுள்ள இயக்கவாற்றல் தொடர்புகளையுடைய இவ்விரிவான பார்வை கட்டமைப்பினூடாக வடக்குப் பொருளாதாரத்தினை ஈடுபடுத்தல் மூலம் புதிய அபிவிருத்திப் பாதைக்கு வித்திடலிற்கான தகவல்களை வழங்குதலை நோக்காகக் கொண்டுள்ளது.

### தூண் 1: உற்பத்திக் காரணிகள்

பொருளாதார சுபீட்சம் மற்றும் நலனோம்புகைக்கு நீடித்துநிலைத்திருக்கக்கூடிய பொருளாதார வளர்ச்சி அவசியமானதாகும். பதிலாக, இது உற்பத்தியை அதிகரிப்பதில் தங்கியுள்ளது. உற்பத்தியினை உச்சப்படுத்துவதற்கான வினைத்திறனான கொள்கைகள், மூலதனம், தொழிற்படை, நிலம் மற்றும் இயற்கை வளங்கள் போன்ற உற்பத்திக் காரணிகளின் சிறந்த சேர்க்கைகளின் பகுப்பாய்வின் அடிப்படையிலானதாகக் காணப்படல் வேண்டும். இக்காரணிகளின் குறிப்பிடத்தக்க பண்புகள் மற்றும் அளவுகள் பொருளாதார வளர்ச்சிக்கான அளவினையும் வேகத்தினையும் அதேபோன்று இது அதன் வடிவத்தினையும் தொழிலை உருவாக்கக்கூடியதா அல்லது உருவாக்காத வளர்ச்சியைக் கொண்டதா, சமத்துவமான வளர்ச்சியா, நீடித்துநிலைத்திருக்கக்கூடிய வளர்ச்சியா என்பனவற்றையும் தீர்மானிக்கின்றது.

#### மூலதனம்

தேசிய பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கான பேரண்டப் பொருளாதார கொள்கைகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 30.35 சதவீத மூலதனத்தினை முதலீடு செய்வதனை நோக்கமாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தன. தேசிய பொருளாதாரத்தைப் போலவே வடமாகாண பேரண்டப் பொருளாதார வளர்ச்சியும் மூலதன முதலீட்டு மட்டத்திலேயே தங்கியுள்ளது. தேசிய வளர்ச்சியினையொத்த வீதத்தினை அடைவதற்கு வடக்கின் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் பொருளாதார அடித்தளத்தை விரிவாக்குவது அவசியமாகவுள்ளது. எனவே பாரியளவான மூலதனச் சொத்துக்கள் அழிக்கப்பட்டமை மற்றும் கடந்த தசாப்த காலமாக மூலதனத் திரட்சி முடக்கிவிடப்பட்டமை என்பனவற்றை ஈடுசெய்யும் விதத்தில் பாரியளவு மட்டங்களிலான மூலதன இருப்பு தேவைப்படுகின்றது என்ற வாதம் முன்வைக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வரைபடம் 1: பொருளாதார அபிவிருத்தி முதன்மைத் திட்டத்திற்கான கட்டமைப்பு**

<u>அபிவிருத்திக்கான சமூக அடிப்படைகள்</u>

**உணவும் ஊட்டச்சத்தும்**

உணவுப் பாதுகாப்பு மற்றும் வீட்டலகு மீளெழுச்சி

**உறைவிடம், நீர் மற்றும் சுகாதாரம்**

நிலமற்றோருக்கான வீடமைப்பு, மேம்படுத்தப்பட்ட நீர் மற்றும் சுகாதார சேவைகள்

**நலம்**

சேவை செயற்பரப்பு, மாற்றுத்திறன் மற்றும் உளநலப் பிரச்சனைகளுடனான மக்களுக்காக உருவாக்கப்பட்ட ஆதரவுகள்/ முதியோர் சனத்தொகைக்கான சேவைக் கிடைப்பனவு

**கல்வி**

பாடசாலை வரவு மற்றும் அடைவு, விஞ்ஞானம் மற்றும் ஆங்கில கற்பித்தல் தரம் மற்றும் செயற்பரப்பு போன்றவற்றை அதிகரித்தல்

**உற்பத்தி பொருளாதாரத் தளத்தினை வலுப்படுத்துவதற்காக சமூகப் பாதிப்புக்களை கட்டுப்படுத்தல்**

<u>**உற்பத்தி**</u>

**மூலதனம்**

தாங்கிக் கொள்ளக்கூடிய முதலீட்டு மூலதனம், தொழிற்படு மூலதனம்

**தொழிலாளர்**

பெண்கள் தொழிற்படையின் பங்கேற்பு, இளையோர் வேலைவாய்ப்பின்மை, திறன் அபிவிருத்தி, புலம்பெயர் தொழிலாளர்

**நிலமும் இயற்கை வளங்களும்**

நிலக்கிடைப்பனவு, நிலப்பயன்பாடு, நிலம் துண்டாக்கல், இயற்கைவள முகாமைத்துவமும் பாதுகாப்பும்

**வேளாண்மை, கைத்தொழில் மற்றும் சேவைகளுக்கான உற்பத்திக் காரணிகளை ஒழுங்கமைத்தலும் ஒன்றுதிரட்டலும்**

<u>**இயலுமைப்படுத்தும் சூழல்**</u>

**தொழில்நுட்பம், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி**

குறைந்த தொழில்நுட்பம், குறைந்த செலவிலான தீர்வுகளை பரந்த நிலையில் மேம்படுத்துதல்

**உட்கட்டமைப்பு**

சிறிய உற்பத்தியாளர்களின் தேவைகளுக்கு எதிர்கால உட்கட்டமைப்புக்களைச் சமப்படுத்தல்

**ஒழுங்குவிதிகள்**

நிலக்கிடைப்பனவு, இயற்கை வளங்களின் அடித்தளத்தினை பாதுகாத்தல், ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு தரங்களை மேம்படுத்தல்

**நிறுவனங்கள்**

வினைத்திறனான ஆதரவினை வழங்குவதற்கு அரச நிறுவனங்களை ஒழுங்குபடுத்தல், உற்பத்தியாளர் அமைப்புக்கள் மற்றும் வலையமைப்புக்களை உறுதிப்படுத்தல்.

**சந்தைகள்**

முறைமைகளை விருத்தி செய்தல், ஏற்றுமதி வர்த்தக இணைப்புக்கள்

**நிலையான உற்பத்தி அதிகரிப்பிற்காக பொருளாதார செயற்பாட்டாளர்களின் இயலளவு மாற்றத்திற்குப் பதிலிறுத்துகின்ற பொருளாதார சூழலினை உறுதிப்படுத்தல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்குப் பொருளாதரத்தில் போரின் பின்னரான முதலீட்டு மட்டங்கள் அதிகளவாக காணப்படுகின்ற போதிலும் முதலீடு செய்யப்பட்ட மூலதனத்தின் தன்மையானது (குறிப்பாக உட்கட்டமைப்பு, தனிநபர் வாழ்வாதாரம் மற்றும் சுயதொழில் திட்டங்களிலான கடன்கள்) நிலையான வருமான வழிகள் மற்றும் வேலைவாய்ப்பு என்ற நியதிகளில் அவை பயனளிக்கவில்லை. இது பெறுமதி வாய்ந்த உற்பத்திச் சுழற்சியின் மூலம் மூலதனத் திரட்சியையோ முதலீட்டினையோ உருவாக்கவில்லை.

முதலாவதாக நிறுவனங்கள் மூலமான பிடித்துவைத்தல் வருமானம் மற்றும் ஒதுக்கப்பட்ட வருமானம் போதியளவு இல்லாமை ஆகிய உற்பத்தியாளர் பண்புகள் உற்பத்தி இயலளவு மற்றும் உற்பத்தித் தளத்தினை விரிவுபடுத்தல் மற்றும் பன்முகப்படுத்துவதற்கான **நீண்டகால மூலதன முதலீட்டின்** கிடைப்பனவினைக் குறைத்துவிட்டது. இரண்டாவதாக, ஏற்கனவே காணப்படுகின்ற சொத்துக்களின் இயலளவுப்பயன்பாட்டை அதிகரிக்கவும், புதிய பொறிகளின் தொழிற்பாட்டினைத் தொடர்வதற்கும் அவசியமான **தொழிற்படு மூலதனக் கிடைப்பனவு** குறைவாகவுள்ளது. பிணையுறுதிகளின் மூலம் உத்தரவாதப்படுத்தப்பட்ட உயர்ந்த வட்டி வீதங்களையுடைய மேலதிகப்பற்று வசதிகளை குறுகிய மற்றும் நடுத்தர காலத்தில் அறவிடுகின்ற நடைமுறைகள் காணப்படும் இக்காலப்பகுதியில் நீண்ட கால முதலீட்டினையும் தொழிற்படு மூலதனத்தினையும் வர்த்தக வங்கிகளிடமிருந்து பெற்றுக்கொள்வது கடினமானதாகும். முறைசார் வங்கி நிறுவனங்களிலிருந்து தாங்கக்கூடிய விதத்திலான நிதிக் கிடைப்பனவிற்கு ஆதரவு வழங்கலும் வசதிப்படுத்தலும் கிடைப்பது எதிர்கால அபிவிருத்தித் திட்டமிடலில் ஒரு பிரதான கூறாக அமையவேண்டும்.

**தொழிலாளர்**

உற்பத்தியில் தொழிலாளர்களின் அதிகரித்த பங்குபற்றுதலானது பொருளாதார வளர்ச்சியினையும் வேலை வாய்ப்பினையும் உடனடியாக அதிகரிக்கும். வடமாகாணத்தில் பெண்களின் பங்களிப்பு வீதம் குறைவாக இருப்பதனைக் கவனத்திற்கொள்கையில், **தொழிற்படையினுள் அதிகளவிலான பெண்களை கொண்டு வருவதன்** மூலம் உற்பத்தி குறிப்பிடத்தக்க அளவில் அதிகரிக்கும். இப்புதிய வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்களை பெண்களின் வீட்டுப்பொறுப்புக்களை நிறைவேற்றுதல், ஒழுக்கமான வேலை நிலைமைகளை வழங்குதல், அண்மையிலுள்ள வேலைத்தளம், நெகிழ்ச்சித்தன்மையுடன் வேலைநேரம் என்பவற்றை உள்ளடக்கியதாக வடிவமைத்தல் அவசியம். பெண்களை இலக்காகக் கொண்ட வாழ்வாதார நிகழ்ச்சித்திட்டங்கள், கூலிச் செலவுகளைக் கருத்திற் கொள்ளாது விற்கப்படுகின்ற கைவிளைப்பொருட்கள் போன்ற உற்பத்திகள் முறிவடைந்து போகின்றமை போலன்றி, அவற்றிற்கு அப்பாற்பட்டு வடிவமைக்கப்படல் வேண்டும். உற்பத்தி நடவடிக்கையில் **இளைஞர்களை ஒருங்கிணைப்பதற்கான** வழிகளைக் கண்டறிவதும் கிரமமான வேலை வாய்ப்பும் சமமான முக்கியத்துவம் உடையனவாகும்.

நீண்டகால உயர் மட்டத்திலான உற்பத்தித்திறன், சிறிய வேளாண்மை உற்பத்தியாளர்களிடமிருந்து தொழிலாளர்களுக்கான சிறந்த வருமானம் என்பனவற்றை இயலச் செய்வதற்கு திறன்வாய்ந்த தொழில் மற்றும் தொழில்சார்நிபுணத்துவ வியாபாரம் மற்றும் கைத்தொழில் மற்றும் சேவைத்துறை நிறுவனங்களுக்கான நிதியியல் முகாமைத்துவம் என்பவற்றை உள்ளடக்கிய வகையிலான **மனிதவளத்தின் குறிப்பாக இளையோரின் தரத்தினை மேம்படுத்துவதற்கு** தொடர்ச்சியான முதலீடு இடம்பெறவேண்டும். இதற்குச் சமாந்தரமாக, அடுத்த தசாப்த காலத்தில் பொருளாதாரக் கட்டமைப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வாறு மாற்றமடையும் என்ற எதிர்வுகூறலுடன் இணைந்த வகையில் காணப்படும் என்பதற்கேற்ப தொழிற்படை அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பது மிகமுக்கியமானதாக இருக்கும். வடமாகாணத்தில் தொழில் வாய்ப்புக்களின் தரம், அளவு ஆகிய இரண்டினையும் அதிகரிப்பதற்கான ஒருங்கிணைந்த முயற்சியில்லாவிடின் புலம்பெயர்தல் மாதிரியின்[13] தற்போதைய அதிகரித்த போக்கு தொடரும்.

**நிலமும் இயற்கை வளங்களும்**

உற்பத்தியில் நிலம் மற்றும் இயற்கை வளங்களைச் சிறப்பாக பயன்டுத்தப்படமுடியும். வடமாகாணம் பெருமளவான வளங்களைக் கொண்ட வேளாண்மை நிலம், காடுகள், உள்நாட்டு நன்னீர்த்தேக்கங்கள் மற்றும் குளங்கள், மீன்பிடிக்கான பரந்த விரிந்த கடற்கரைகள், கால்நடைகளுக்கான மேய்ச்சல் நிலம் மற்றும் பாரியளவான இயற்கையாக வளர்ந்த பனைமரங்கள் போன்றவற்றைக்கொண்டுள்ளது. உற்பத்தியில் பயன்படுத்தப்படும் நிலம் மற்றும் இயற்கை வளங்களின் அளவினை அதிகரித்தல் அதேபோன்று அலகுக்கான உற்பத்தித்திறன் மற்றும் வினைத்திறனையும் மேம்படுத்தல் என்பன பொருளாதார வெளியீடு மற்றும் வளர்ச்சியினை அதிகரிப்பதில் பங்களிக்கமுடியும்[14].

வன்னிப்பிராந்தியத்தில், பாராதீனப்படுத்தலுக்கு மேலும் கணிசமானளவிற்கு அரச நிலங்கள் உள்ளதுடன் பெறுமதி சேர்க்கப்பட்ட பொருட்களின் சிறிய அளவிலான வியாபாரமப்படுத்தப்பட்ட உற்பத்திகளின் மூலப்பொருளாக பயன்படுத்தப்படக்கூடிய பயன்படுத்தப்படாத பனைவளங்கள் கட்டுப்பாடற்ற அளவில் உள்ளன. யாழ்ப்பாணக்குடாநாடு போன்ற இயற்கை வளங்களும் நிலங்களும் குறைவாகக் கிடைக்கக்கூடிய பகுதிகளுக்கு சொட்டுநீர்ப்பாசனம் மூலமான உற்பத்தித்திறன் அதிகரிப்பு போன்ற புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதனூடக வினைத்திறனுடன் நீரைப்பயன்படுத்தலை அதிகரித்தல் வேண்டும். அறுவடைக்குப்பின்னரான இழப்புக்களைக் குறைப்பதற்கான செயற்பாடுகளை மேம்படுத்துவதன் மூலம் அனைத்து வேளாண்மை துணை உற்பத்தித் துறைகளிலும் பொருளாதார நன்மையினை உருவாக்கமுடியும்.

**உற்பத்திக்காரணிகளை உத்தம அளவில் ஒன்றிணைத்தல்**

வடக்கிலுள்ள உற்பத்திக் காரணிகளை நடுத்தர காலத்திலிருந்து நீண்ட காலப்பகுதியில் வளர்ச்சியில் நிரந்தர அதிகரிப்பினை உறுதிப்படுத்தக்கூடிய விதத்தில், இக்காரணிச் சந்தைகளில் அமைப்பியல் மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய விதத்தில் ஒன்றுதிரட்டி ஒழுங்கமைப்புச் செய்வதற்கு முன்னுரிமையளித்தல் வேண்டும். முதலீட்டினை உத்தமமாக்குதல், அதிகரித்த ஆரம்பம் மற்றும் பெறுமதி சேர்ப்பில் மாசற்ற சுழற்சிகளைத் தோற்றுவிக்கும். பின்னைய பெறுமதிசேர்த்தலானது ஆரம்ப உற்பத்திகளின் கேள்வியை அதிகரிப்பதுடன் வருமான மட்டங்களிலான அதிகரிப்பினையும்

---

[13] 2011 – 2016 வரையான காலப்பகுதியில் வடமாகாணத்திலிருந்து வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்கான வெளியேற்றத்தில் 50 சதவீத அதிகரிப்பு அறிக்கையிடப்பட்டதுடன் 2014இன் அதியுயர் எண்ணிக்கையான 12,642 ஆகக் காணப்பட்டது [இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக புள்ளிவிபரங்கள் 2017 : இலங்கை மத்திய வங்கி].

[14] 2011- 2015 வரையிலான காலப்பகுதியில் உற்பத்தித்திறன் அதிகரிப்பின் தொடர்ச்சியான பற்றாக்குறையை நிரூபிக்கும் வகையில் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான வேளாண்மைத்துறையின் பங்களிப்பு ரூ.47,477 – 59,911 மில்லியனுக்கிடையில் காணப்பட்டது [இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக புள்ளிவிபரங்கள் 2017 : இலங்கை மத்திய வங்கி].



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கும். அதிகரித்த வருமானம் மற்றும் வேலைவாய்ப்பு ஒரே நேரத்தில் பொருட்கள் சேவைகளுக்கான கேள்வியை அதிகரிப்பதுடன், இவை உள்ளூரில் நிரம்பல் செய்யப்படக்கூடியவையாக இருப்பின், அது தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பிற்கான கேள்வியை தொடர்ந்தும் உருவாக்கும்.

**தூண் 2 : இயலுமைப்படுத்துகின்ற சூழல்**

உற்பத்தியானது ஒரு வெற்றிடத்தில் ஒரு போதும் இடம்பெறுவதில்லை. பெறப்படும் நன்மைகள் உச்சமாக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கு மாகாண வளர்ச்சி மற்றும் பங்கீட்டினை மேம்படுத்துவதற்கான இயலுமைப்படுத்தும் சூழலினை அரசும் ஏனைய செயற்பாட்டாளர்களும் உருவாக்குவது தவிர்க்க முடியாததாகும். வடக்கில் இனங்காணப்பட்ட நெருக்கடித்தன்மை வாய்ந்த தடைகள்: பொருத்தமான தொழில்நுட்ப தரமுயர்த்தல், யுத்தத்தின் பின்னரான உட்கட்டமைப்பு இடைவெளி, ஒழுங்குபடுத்தலிலான குறைபாடுகள், நிறுவன ரீதியான பலயீனங்கள் மற்றும் சாத்தியமான சந்தை இணைப்புக்கள் உள்ளிட்ட சந்தை அணுகும் தன்மை என்பனவற்றை உள்ளடக்குகின்றன.

வடக்கின் முதலீடு குறைவாகவுள்ளமையினால் தொழில்நுட்பம் **ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி** நாட்டின் ஏனைய பகுதிகளினை விட பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றன. உறுதியான பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான உற்பத்தித் திறனில் ஒரு தொடர்ச்சியான அதிகரிப்பு ஏற்பட்ட பின்னர், புதிய தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்கு அல்லது ஊக்குவிப்பதற்கு ஒரு திட்டமிட்ட கொள்கை அணுகுமுறை அவசியமாகின்றது. அத்தகைய கொள்கையானது, தற்போதுள்ள இயலாற்றல் திறன்கள் மற்றும் ஏற்கனவேயுள்ள பொருளாதாரத் தளத்தின் வளங்கள் மற்றும் செயற்பாட்டாளர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்கள் பொருத்தமானவை என்பதனை உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். பரவலாக பின்பற்றப்பட்ட ஒரு உறுதியான அணுகுமுறையானது தற்போது கிடைக்கக்கூடியதாக உள்ள குறைந்த தொழில்நுட்ப மற்றும் குறைந்த செலவிலான தீர்வுகளிலிருந்து உடனடியாகப் பெறக்கூடிய நன்மைகளைக் காட்டும்.

**உட்கட்டமைப்பு:** உற்பத்தித்திறனுடைய பொருளாதார செயற்பாடுகளுக்கு தேவைப்படும் உட்கட்டுமானத்தில் ஒரு இடைவெளி தொடர்ச்சியாகக் காணப்படுகின்றது. முன்னோக்கிப் பார்க்கையில், சிறியளவிலான உற்பத்திகளால் ஆரம்பத்தில் ஆதிக்கம் செலுத்தப்படக்கூடிய மாகாணத்தின் அடிப்படை பொருளாதார உபாயங்களுக்குச் சமமாகக் காணப்படும் உற்பத்திக்கான தடைகளை நீக்கும் விதத்தில் உட்கட்டுமான முதலீடுகள் இணைக்கப்படுதல் வேண்டும். உதாரணமாக, சிறியளவிலான மீன் பிடிப்பவர்களுக்கான கடலோர உட்கட்டமைப்பு மற்றும் உள்நாட்டு மீன் வளர்ப்பிற்கான சிறிய நீர்த்தேக்கங்களின் புனரமைப்பு, விலங்கு வளர்ப்பு மற்றும் பண்ணை வளர்ப்பு என்பனவற்றை உள்ளடக்குகிறது.

உற்பத்திக்கான தடைகளை அகற்றுவதன் மூலம் நீடித்துநிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்திக்கு ஆதரவளிக்கக்கூடிய விதத்தில் **ஒழுங்குவிதிகள்** கொள்கைக் கருவியாகப் பயன்படுத்தப்பட வேண்டும். எனினும், சமகாலத்தில் சுரண்டல்களிலிருந்து உற்பத்திக் காரணிகளை (உ-ம்: இயற்கை மூலவளத் தளம் மற்றும் தொழிற்படை) பாதுகாத்தலும் வேண்டும். வடக்கைப் பொறுத்தவரையில் கால்நடை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ப்பிற்கு போதுமான மேய்ச்சல் தரையினைப் பெற்றுக்கொள்வதில் காணப்படும் கரிசனை தொடர்ச்சியான பயிர்செய்யத்தக்க நிலத் துண்டாடல்கள் மற்றும் கடலின் அடிமட்டத்திற்குச் செல்லும் ரோலர் படகுகளின் காரணமாக கடலோரப்பகுதியின் சிதைவடையும் தன்மை என்பன நீடித்தநிலையான உற்பத்தியை உறுதிசெய்யும் வகையில் உடனடியாகக் கட்டுப்படுத்தப்பட வேண்டிய விடயங்களாகவுள்ளன. இறுதியாக இத்தனிமைப்படுத்தப்பட்ட பிராந்தியத்தை தேசிய பொருளாதாரத்துடன் ஒருங்கிணைப்பதற்கான முயற்சியின் ஒருபகுதியாக அதிகரித்த விழிப்புணர்வு, தேசிய சட்டம் மற்றும் விதிமுறைகளைப் பயன்படுத்துதல் அவசியமாகத் தேவைப்படுகின்றன. வடக்கில் எதிர்காலத்தில் புதிய கைத்தொழில்களை நிறுவுவதுடன் குறிப்பாக சுகாதாரம் மற்றும் பாதுகாப்பினை மேம்படுத்துவதற்கான ஒழுங்குவிதிகளை இற்றைப்படுத்துவதும் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதும் தொழிற்படையினை விரிவாக்கும் வலுவான பங்கேற்பினை இயலுமைப்படுத்த முக்கியமானவையாகும்.

**நிறுவனங்கள்:** அதிகரித்த பொருளாதார உற்பத்திக்கு ஆதரவளிப்பதனை நோக்கமாகக் கொண்ட குறிப்பாக, அரசினால் தொழிற்படுத்தப்படும் நிறுவனங்கள் குறைந்தளவு இணைப்புக்களைக் கொண்டிருப்பதுடன் வடபகுதியின் உற்பத்தியாளர்களுக்கும் நிறுவனங்களுக்கும் பயன்மிக்க ஆதரவினை வழங்க முடியாதனவாகவுள்ளன. சிறந்த பெறுபேறுகளை வழங்கும் விதத்தில் சிறப்பியல்பு வாய்ந்ததும் நிபுணத்துவம் கொண்டதுமான பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள அநேக செயற்பாட்டாளர்களிடையே மிகச் சிறியளவிலான மட்டுப்படுத்தப்பட்ட மூலதனமே வழங்கப்பட்டிருக்கிறது.

பொருளாதார செயற்பாட்டாளர்களிடையேயான அமைப்பியல் முறைமைகளும் ஒத்துழைப்பும் நீண்டகாலப் போரினால் அழிக்கப்பட்டுவிட்டன. பாரம்பரியமாகவே கூட்டுறவின் ஒரு பாகமாக விளங்கிய சிறுவேளாண்மையாளர்களும் மீனவர்களும் தொகை வடிவிலான உள்ளீடுகளின் கொள்வனவு, சேமிப்பு மற்றும் கடன்கள், சந்தைப்படுத்தல் போன்றவற்றினூடாக வினைத்திறனை எதிர்பார்த்திருப்பதுடன், சுரண்டல்களுக்கு வழியமைத்துவிட்டு தற்பொழுது பெருமளவிற்கு தனித்தனியாகவே தொழிற்படுகின்றனர். உற்பத்தியை ஒழுங்கமைப்பதற்கும் பேரம் பேசும் திறனை அதிகரிப்பதற்கும் உற்பத்தியாளர்கள், ஊழியர்கள், நிறுவனங்களின் அமைப்புக்கள் மற்றும் வலைப்பின்னல்களை மீளஉத்வேகப்படுத்துவதுடன் பலப்படுத்துவது மிக அவசியமான ஒன்றாக உள்ளது. மேலும், உறுதியான நிறுவன ரீதியான அமைப்பு, சந்தைகளை உருவாக்கல் மற்றும் பரஸ்பரம் நன்மையளிக்கக்கூடியதான அபிவிருத்தி முயற்சிகள் என்பவற்றிற்கான ஒரு அரச - தனியார் பேச்சுவார்த்தையை இயலுமைப்படுத்தும்.

நியாயமான வழிமுறைகளிலான **சந்தை முறைமையும் சந்தையினை அணுகுவதும்** வியாபாரத்தை வசதிப்படுத்துவதற்கான முக்கிய இணைப்புக்களை வழங்குகின்றன. வடக்கு பொருளாதாரமானது அண்மைக்காலமாகவே நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு திறந்துவிடப்பட்டுள்ளமையினால் வடக்கு உற்பத்தியாளர்களின் சந்தைக் கேள்விக்குப் பதிலிறுத்தும் வகையிலான உற்பத்தியைத் திட்டமிடவும் மிகை உற்பத்தியை நியாயமான விலைகளில் விற்பனை செய்யவும் இயலுமான நிலையை உறுதிப்படுத்துவதற்கு தேவையான தொடர்புகள், உட்கட்டமைப்பு, போக்குவரத்து வசதிகள், தகவல்கள் மற்றும் வலையமைப்புகள் போதுமானவையாகக் காணப்படவில்லை. வடக்கில் சிறிய உற்பத்தியாளர்கள் ஆதிக்கம் செலுத்துவதனாலும் குறைந்தளவிலான உற்பத்தித்திறன் மற்றும் காலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த தொழிநுட்பத்தினை பயன்படுத்தல் என்பவற்றின் காரணமாக மொத்த இலாபம் குறைவாக உள்ளதாலும் "நியாயத்தன்மை" என்ற பிரச்சனை வடக்கிற்கு முக்கியமானதொன்றாக உள்ளது.

சந்தை ஆராய்ச்சி மற்றும் அதன் செல்நெறிப் பகுப்பாய்வின் கிடைப்பனவு, சந்தை இணைப்புக்களின் அபிவிருத்தி, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டில் வதியும் இலங்கையர்கள் மற்றும் ஏற்றுமதி சந்தைகளுக்கிடையிலான வியாபார தொடர்புகள் என்பன வடக்கின் எதிர்கால உற்பத்தியில் ஏற்படக்கூடிய அதிகரிப்பில் கணிசமான பங்கினை ஈர்த்துக் கொள்வது முக்கியமானதாகும். சந்தையினை வசதிப்படுத்தும் காத்திரமான வழியினைக் கண்டறியும் விதத்தில் வடக்கிலுள்ள சந்தை இணைப்புக்களை தெற்கிலுள்ள பெறுமதிச் சங்கிலிகளுடன் இணைப்பது அவசர தேவையாகவுள்ளது.

**தூண் 3 : சமூக அடித்தளங்களின் அபிவிருத்தி**

வடமாகாணத்திற்கான எந்தவொரு பொருளாதார வளர்ச்சி உபாயத்தினதும் வெற்றியானது அங்கு வசிக்கும் மக்களின் வாழ்க்கைத்தரத்தில் ஏற்படும் மாற்றத்தினாலேயே தீர்மானிக்கப்படுதல் வேண்டும். அபிவிருத்தியில் சமூகங்கள் பங்குபற்றுவதற்குக் காணப்படும் தடைகளை நீக்குவதற்கு முன்னைய அபிவிருத்தி முயற்சிகளினூடாக பேசப்படாத விடயங்கள் மற்றும் போரினால் உருவான சமூக ரீதியான பாதிப்புகள் என்பன அகற்றப்படுதல் வேண்டும்.

வடக்கின் பொருளாதார வளர்ச்சி கட்டியெழுப்பப்பட வேண்டிய பலமான சமூக அடித்தளத்தினை இடுவதற்கு, மக்களின் ஆரோக்கியத்தை தீர்மானிக்கும் "சமூக காரணிகளான பிறப்பு, வளர்ச்சி, வாழ்க்கை, வேலை செய்தல் மற்றும் வயது என்பனவற்றுக்கான சூழலினை" மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை கட்டியெழுப்புதல் வேண்டும். அந்த அணுகுமுறையானது வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் வருமான அதிகரிப்பில் உணவின் தரம், கல்வி மற்றும் திறன்கள், வீடமைப்பு, வாழ்க்கைச்சூழல் மற்றும் சமூக வலையமைப்புக்கள் என்பன முக்கியமானவை என்பதனை அங்கீகரிக்கின்றது. வடக்கினைப் பொறுத்தவரையில் நான்கு அம்சங்களான உணவு மற்றும் ஊட்டச்சத்து புகலிடம், நீர் மற்றும் சுகாதாரம் ஆரோக்கிய சேவைகள் மற்றும் கல்வி ஆகியன பரிந்துரைக்கப்படுகின்றன.

**உணவும் ஊட்டச்சத்தும்:** உணவுப் பாதுகாப்பினை அடைவதற்கு வீட்டுத்துறையின் மேம்பாட்டினை அடைதல் மிக முக்கியமானதாகக் காணப்படுகிறது. முதலீடானது, வறிய குடும்பங்களுக்கு காசு மற்றும் பண்ட வகையில் தமது ஊட்டச்சத்துத் தேவையைப் பூர்த்திசெய்வதற்கு ஏற்றவிதத்தில் பல்வேறுபட்ட வருமான வகைகளை அடையும் வசதியை உருவாக்குதல் வேண்டும். இதற்காக நடைமுறைப்படுத்தப்படும் அரச திட்டங்களினை அவற்றின் தன்மையில் முழுமையானவையாகவும் சமத்துவத்தை அதாவது ஒவ்வொரு தனிப்பட்ட வீட்டலகுகளினதும் தேவை மற்றும் இயலளவினை அடிப்படையாகக் கொண்டும் அமுல்படுத்தல் வேண்டும். இது, பின்தங்கியவர்கள் எனக் கருதப்பட்ட வீட்டலகுகளுக்கு கொடுக்கப்பட்ட கையேடுகளினடிப்படையில் பங்கீட்டுத்திட்டங்களுக்கான பயனாளிகளைத் தெரிவு செய்யும் பொதுவான நடைமுறைக்கு மாறானதாகும். இத்தகைய வறுமை நிலையிலுள்ளவர்களுக்குத் தமது தேவைகளை பூர்த்திசெய்வதற்கு தேவையான வளங்கள் கிடைப்பனவையும் அவை உரிய நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டன என்பதையும் உறுதிப்படுத்தக்கூடிய விதத்தில் கூடியளவிலான உதவிகள் தேவைப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீடமைப்பு, நீர் மற்றும் சுகாதாரம்:** வட மாகாணத்தில் ஏறத்தாள 10 சதவீதமானோர் பூரணமாக நிலமற்றவர்களாகவும்[15] கூலி வேலையில் தங்கியிருப்பதனாலும் ஒப்பீட்டு ரீதியில் மிகவும் பாதிக்கப்பட்டவர்களாகவும் உள்ளனர். நடைமுறையிலுள்ள அரச மீள்குடியேற்ற திட்டங்கள் தேவையைப் பூர்த்தி செய்வதற்குரிய இயலுமையைக் கொண்டிராததுடன் அவற்றின் வடிவமைப்பின்படி, வீடமைப்புத் திட்டத்திற்கு தகுதிபெறுவதற்குரிய குறைந்தபட்ச தகைமைத் தேவையான சொந்த நிலத்தினைக்கொண்டிராத தன்மையினடிப்படையிலான நிலமற்றோரை அது உள்ளடக்கவில்லை. யாழ்ப்பாணத்தில்[16] சமமற்ற விதத்தில் அதிகளவில் இடம்பெறும் பொதுவாக குறிப்பிடத்தக்க நோய்களின் தாக்கமானது, வடமாகாணத்தினுள் மக்களை ஆரோக்கியமானவர்களாக பேணுவதற்கு மேம்பட்ட நீர் மற்றும் சுகாதார சேவைகளில் முதலீடு செய்வதன் அவசர தேவையை சுட்டிக்காட்டுகின்றது. இதற்கான தீர்வானது வரண்ட வலய காலநிலை, காலநிலை மாற்றத்தின் தாக்கங்கள் மற்றும் பெருமளவான கிராமிய மக்களுக்காக செலவிடக்கூடிய அளவு என்பனவற்றை கவனத்திற்கொண்டு கவனமாக வடிவமைக்கப்படுதல் வேண்டும்.

**ஆரோக்கியமும் சமூக கவனிப்புச் சேவைகளும்:** போரினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட சமூகக் குழுக்களுக்கான ஆரோக்கியம் மற்றும் சமூகக் கவனிப்புச் சேவைகள் தற்போது போதுமானவையாக இல்லை. தாதியர் மற்றும் மருத்துவ அலுவலர் பதவிகள் போன்றவற்றில் காணப்படும் அதிகளவான பதவி வெற்றிடங்களின் காரணமாக அதன் இயலுமைக்குக் கீழே தொழிற்பட்டுக்கொண்டிருக்கின்ற நிலைமையை வடக்கின் சேவைகள் கொண்டிருக்கின்றன. மாற்றுத்திறனாளிகள் மற்றும் மனநல ஆரோக்கியத்திற்குரிய தேவைகளுடையோரிற்கான உளவள ஆற்றுப்படுத்தல் மற்றும் செயற்பாடு மற்றும் ஆரோக்கியமான வாழ்வு என்பவற்றிற்கு வழிவகுக்கக்கூடிய சமூக ரீதியான ஒத்துழைப்புப் போன்ற மேம்பட்ட மற்றும் உயிரோட்டமான சேவைகள் அவசியமாக உள்ளன. இறப்பு மற்றும் தொடர்ச்சியான புலம்பெயர்வு ஆகியனவற்றின் காரணமாக முதியோர் சனத்தொகை தொடர்பான தேசியப் போக்கானது வடக்கில் அதிகம் முனைப்புப்பெற்றுக் காணப்படுகின்றது. பெறக்கூடிய மற்றும் தாங்கக்கூடிய தன்மையினைக் கொண்ட சூழ்நிலையில் பணிகளை வழங்கும் மாதிரி தொடர்பில் மீள்சிந்தனை அவசியமாகவுள்ளது.

**கல்வி** : வடமாகாணத்தின்[17] மாணவர்களின் தற்போதைய மிகக் குறைந்தளவான பாடசாலை வருகை மற்றும் அடைவுமட்டமானது, போரின் விளைவாக தசாப்தகாலமாக கல்விச்சேவையில் ஏற்பட்ட தடைகள் மூலம் விளங்கிக் கொள்ளப்பட்டாலும் கூட அது வடக்கிலுள்ள குடும்பங்களால் முகங்கொடுக்கப்படும் வறுமை மற்றும் குறைந்த வருமானத்தின் அடையாளமாவும் காணப்படுகிறது. வடக்கின் உயர்ந்தளவில் காணப்படும் பாடசாலை இடைவிலகலை மதியவேளை பாடசாலை உணவு மற்றும் ஏனைய ஊட்டச்சத்துத் திட்டங்களின் விரிவாக்கம் மூலம் குறைக்கமுடியும். வன்னி

---

15 மாவட்ட செயலகங்கள் மற்றும் மாகாண சபையிலிருந்து 2018 ஒகத்திலுள்ளவாறான தரவுகள் தொகுக்கப்பட்டன.

16 2017இல் யாழ்ப்பாண மாவட்டம் மட்டும் வயிற்றுளைவு மற்றும் தைபொயிட் காய்ச்சல் தேசிய மட்டத்தின் 20 சதவீதம் மற்றும் 34 சதவீதத்திற்கு வகைகூறியது [வாராந்த தொற்றுநோயியல் அறிக்கை, ஏடு:44, இல. 52, தொற்றுநோயியல் அலகு, சுகாதார அமைச்சு].

17 முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்கள் நாட்டில், முறையே 84 சதவீதம் மற்றும் 85 சதவீதம் என்ற ஆகக்குறைந்த கல்வியறிவு வீதத்தினை அறிக்கையிட்டுள்ளன [தொழிற்படை மதிப்பீடு ஆண்டறிக்கை 2016].



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டங்களில் விஞ்ஞானம் மற்றும் ஆங்கில ஆசிரியர்களை அதிகரிப்பதன் மூலம் குறிப்பாக எதிர்காலத்தில் வேலைவாய்ப்புத்திறனுக்குப் பங்களிக்கமுடியும்.

பணம், சக்தி மற்றும் வளங்களினை நியாயமான முறையில் பங்கீடு செய்வது பிராந்தியத்திற்கு உள்ளே காணப்படும் சமூக ரீதியில் பாதிக்கப்படும் தன்மைகளை மாற்றியமைக்கும். வறுமைக்கோட்டிற்கு கீழும், சிறிது மேலும் வாழ்கின்ற சமூகங்கள் கல்வியறிவின்றி, உணவுப்பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பான வேலைவாய்ப்புப் பிரச்சினைகளை நாளாந்தம் எதிர்கொள்ளும் நிலையில் அவர்களால் அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்யமுடியாது. இப்பின்னணியில், வீட்டுத்துறையின் மீளெழுச்சியைப் பலப்படுத்துதல் மற்றும் ஆரோக்கியம், கல்வி, சமூகநலன் போன்ற சிறப்பாக நிதியளிக்கப்பட்ட சேவைகள் அனைத்தையும் வழங்குதல் போன்றன மூலமாக பொருளாதார வளர்ச்சி முயற்சிகளோடு கூடவே வடக்கின் சமூக அபிவிருத்திக்கான கடப்பாட்டினையும் அரசாங்கம் பேணுதல் வேண்டும்.

**பங்கீடு மற்றும் தாக்குப்பிடிக்கக்கூடியதன்மை என்பனவற்றுடன் வளர்ச்சிக்காக முன்மொழியப்பட்ட உபாயங்கள்**

மேலேயுள்ள பேரண்டப் பொருளாதார பகுப்பாய்வானது, வடமாகாணத்தின் மூலதனம், தொழிலாளர், நிலம் மற்றும் இயற்கை வளங்களைப்பயன்படுத்தி உற்பத்தியினை அதிகரிப்பதற்கும் வேலை வாய்ப்பினை உருவாக்குவதற்கும் முன்னுரிமையளிப்பது மறுக்கப்படமுடியாத ஒன்று என்று பரிந்துரைக்கின்றது. ஆனால், இறுதியாக இதனை எவ்வாறு அடைவது என்பது சமமான முக்கியத்துவம் வாய்ந்ததாகவுள்ளது. நீடித்துநிலைத்திருக்கும் உபாயமானது ஏற்கனவேயுள்ள சிறிய உற்பத்தியாளர்கள் மற்றும் கைத்தொழில்களை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்தின் உற்பத்தி மற்றும் உற்பத்தியாக்கத்தினை அதிகரிப்பதிலும் தொழிற்படைக்கு வெளியேயுள்ளவர்களுக்குப் புதியதும் பாதுகாப்பானதுமான வேலை வாய்ப்பினை வழங்குவதிலும் முதலீடுகளைச் செய்தல் வேண்டும். மேலே குறிப்பிட்ட பிரமாணத்தினை அடையத்தவறிய உயர் வளர்ச்சி உபாயங்கள் போரினால் பாதிக்கப்பட்ட சமூகத்தின் பாதிப்புக்களைக் கட்டுப்படுத்துவதற்கு மீளவும் தவறிவிடும்.

தெரிவு செய்யப்பட்ட வளர்ச்சி உபாயமானது சமூக பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தாக்குப்பிடிக்கக்கூடிய திறன் என்பவற்றை வழங்குவதற்கான பரந்தளவிலான வளர்ச்சியின் பெறுபேறுகளை அனைத்து மக்களுக்கும் பகிர்ந்தளிக்க வேண்டும். போரினால் ஏற்பட்ட சமூக பாதிப்புகள் மற்றும் ஏற்றத்தாழ்வுகளைக் கட்டுப்படுத்துகின்ற அதேவேளை ஏற்கனவேயுள்ள பொருளாதார தளத்தினை மாற்றியமைப்பது என்ற இரட்டை இலக்குகளையும் அடைந்துகொள்ளும் வகையில் அபிவிருத்தியானது **மெதுவானதாகவும், அடிப்படையில் குறைந்த இடர்நேர்வுடையனவாகவும் அமைதல் வேண்டும்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தகைய ஒரு பரந்த தளத்தினை உடைய அபிவிருத்தி மாதிரியின் பண்புகளாக:

- உற்பத்தித்திறன் மேம்பாட்டுச் செயன்முறையை ஆரம்பிப்பதற்கு, ஏற்கனவேயுள்ள மற்றும் புதிய சிறியளவிலான உற்பத்திகள் மற்றும் கைத்தொழில்களில் பொருத்தமான விதத்தில் மூலதனத்தை முதலீடு செய்தல்.
- சாத்தியமானளவிற்கு அதிகளவான மக்கள் பாதுகாப்பானதும் உறுதியானதுமான கிரமமான தொழில் செறிவுமிக்க வழக்கமான வேலை வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்ளத்தக்கதாக இருத்தல்.
- நிலம் மற்றும் இயற்கை வளங்களை பரந்தளவில் பயன்படுத்தும் விதத்தில் முக்கியமாக வேளாண்மைக்கு முன்னுரிமையளிப்பதாக இருத்தல்.
- பாரியளவான இடர்நேர்வுகளை எதிர்நோக்கக்கூடியவர்களுக்கும், ஏற்றுமதி உட்பட்ட உயரளவான பெறுமதி சந்தையினுள் நுழையக்கூடிய நடுத்தரகால முயற்சியாளர்களுக்கும் ஆதரவளித்தல்
- பிராந்திய மற்றும் பாலின வேறுபாடுகள் குறைக்கப்படுவதனை உறுதிப்படுத்தும் விதத்தில் மாகாணம் முழுவதிலும் வேறுபட்ட மக்கள் குழுக்களிடையேயும் பகிர்ந்தளிப்புக்களை மேற்கொள்ளுதல்.

நீண்ட காலத்தில் வளர்ச்சியை துரிதப்படுத்தக்கூடிய வளர்ச்சியிலிருந்து வடக்கில் உறுதியானதும் அதிகளவான தாங்குதிறன் கொண்ட பொருளாதார அடித்தளத்தினை உருவாக்கக்கூடிய ஏற்றுமதியை ஊக்குவிக்கக்கூடிய விதத்தில் சில முதலீடுகளுடன் கூடியதான மெதுவானதும் பரந்த தளத்தினை உடையதுமான வளர்ச்சியினை இலக்காகக் கொண்ட இருமுனை உபாயம் ஒன்றினை முறையான விதத்தில் நடைமுறைப்படுத்த வேண்டும்.

**வரைபடம் 2: வடமாகாணத்திற்கான முன்மொழியப்பட்ட பொருளாதார வளர்ச்சி உத்வேகம்**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. வடக்கின் பிரதான சவால்கள்

வடக்கின் நீடித்துநிலைத்திருக்கும் அபிவிருத்திக்கு காணப்படும் தற்போதைய மற்றும் எதிர்காலத்திற்கான நெருக்கடியான சவால்கள், வளங்களை ஒன்றுதிரட்டல் மற்றும் அபிவிருத்திச் செயன்முறையைப் பலப்படுத்தல் என்பனவற்றை மையப்படுத்தி காணப்படுகின்றன.

**தலைமைத்துவம்**

**வடக்கின் பொருளாதார அபிவிருத்திக்கான ஒரு தெளிவான தொலைநோக்கும் அதனை முன்னெடுத்துச் செல்வதற்கான உறுதியான உள்ளூர் தலைமைத்துவமும் எமது அவசர தேவையாக உள்ளன.** போருக்குப் பின்னரான எச்சங்களாகக் காணப்படும் உதவிகளில் தங்கியிருக்கும் தன்மை, இலவசங்களில் தங்கியிருக்கும் கலாச்சாரம் வடக்கில் காணப்படும் பொதுவான மந்தநிலைமை என்பனவற்றை மாற்றுவதற்கு அரச பொறிமுறை, சிவில் சமூகம் மற்றும் சமூகங்கள் என்பன மாற்றத்திற்கான வாய்ப்புக்களைப் பார்க்கவும் நம்பக்கூடிய விதத்தில் புதிய தொலைநோக்குடனும் நெறிப்படுத்தலுடனும் முன்னோக்கிச் செல்லுதல் வேண்டும். போரினால் பாதிக்கப்பட்ட சமூகங்களின் வாழ்க்கையில் காணப்பட்ட பொருளாதாரப் பிரச்சனைகளின் முக்கியத்துவம் தொடர்பில் உள்ளூர் தலைவர்களினால் சிறிதளவு வரவேற்பே காட்டப்பட்டமை மோசமான விளைவுகளுக்கு வழிவகுத்ததுடன் இது பற்றி போதுமான பதிலிறுப்புக்களும் இதுவரை அவதானிக்கப்படவில்லை. இத்தகைய சக்திவாய்ந்த பிரதிநிதிகளின் வகிபாகமானது இன்று பரந்த அடிப்படையாகக் கொண்ட குறிக்கோள்கள் பரந்தளவு சமத்துவமான பொருளாதார விருத்தி மற்றும் பெறுபேறுகளை வழங்கத்தக்க சவால்களை முன்னெடுத்தல் எனும் நோக்கங்களுக்கு முன்னுரிமை வழங்கவேண்டியது அவசியமாகும்.

**அபிவிருத்திச் செயன்முறைகளும் பங்குபற்றுதல்களும்**

அரசியல் தலைமைத்துவம் என்பது பிரதானமாகவுள்ள அதேவேளையில், நிர்வாகம் மற்றும் சமூகங்களின் தலைமைத்துவத்தின் வகிபாகமும் அதன் கட்டுக்கோப்பும் வடபகுதி பொருளாதாரம் முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருப்பதனை உறுதிப்படுத்துவதற்கு மிக முக்கியமானதாகும். அவர்களின் நடவடிக்கையில் பெருமளவானவை மனிதநேய நெருக்கடிக்கு பதிலிறுத்தும் வகையில் அமைதல் வேண்டும். வடக்கின் நிர்வாகத்திலுள்ளோர் திட்டமிடல், இணைப்பு மற்றும் நடைமுறைப்படுத்தல் என்பனவற்றினை **நீண்ட கால அபிவிருத்தியை நோக்கி மீள்திசைமுகப்படுத்துவது அவசியமாகும்.** இவற்றிற்கு வசதியளிக்கும் விதத்தில், மத்திய அரசாங்கமும் கொடைவழங்குநர்களும் போரினால் பாதிக்கப்பட்ட குடித்தொகையினரின் பல்வேறு தேவைகள் தொடர்பிலும் அவை வடக்கில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள கொள்கை உருவாக்கம் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களில் உள்ளடக்கப்பட வேண்டுமா என்பதனை விளங்கிக் கொள்ளும் விதத்தில் அவர்களது வடபகுதி இணைத்தரப்பினருடன் தீவிரமான ஆலோசனை நடத்துவதற்கான வசதியை வழங்குதல் வேண்டும்.

கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், வேளாண்மை அமைப்புக்கள் மற்றும் சனசமூக மையங்கள் போன்றனவற்றிற்குப் புத்துயிரளிப்பதனூடாக அபிவிருத்தியில் மக்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்குபற்றுதலானது பலப்படுத்தப்படல் வேண்டும். பெண்கள் அமைப்புக்களை வலுப்படுத்துவதனூடாக பெண்கள் குரலையும் கூட்டு நடவடிக்கைகளையும் ஓங்கி ஒலிக்கச் செய்வது சிறப்புச் சேவைகளுக்கான தேவையினையும் வாழ்வாதார வாய்ப்புக்களுக்குப் பொருத்தமாக வடிவமைக்கப்படுவதனையும் உயர்த்தும்.

பலயீனமான அரச சமூக நிறுவனங்களும் வலையமைப்பும் என்பது சமூகங்கள் உள்ளூராட்சி செயன்முறையில் வினைத்திறனுடன் பங்குபற்றவில்லை என்பதனையே குறிக்கும். இது, தொடர்ச்சியான ஏற்றத்தாழ்வுகள், பிராந்தியங்களுக்குள்ளேயும் அவற்றிற்கு இடையேயும் காணப்படும் சமமற்ற அபிவிருத்திகள், பால், இனம், சாதி என்பவற்றில் காணப்படுவதுடன் இது உள்ளூர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களில் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டு வருகின்றன அல்லது போதுமானளவில் வலியுறுத்தப்படாமல் இருக்கின்றன. அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் பங்கேற்பிலும் நிதியிடலிலும் காணப்படும் கட்டுப்பாடுகள் சமூக நிறுவனங்கள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அலுவலர்களிடையேயான அதிகாரத்தினை மீளச்சமநிலைப்படுத்தவும் அபிவிருத்தியை மையமாகக் கொண்டு சமூகத்தின் மேல் தட்டிலிருந்து கீழ்மட்டம் வரை நகரவும் உதவும்.

**தொழிற்படை வாய்ப்புக்களும் நியமங்களும்**

அனேகமாக யுத்தகாலப்பகுதியில் பிறந்த இளம் சந்ததியினருக்கு வழங்கப்பட்டுள்ள வாய்ப்புக்களில் ஏற்பட்ட முக்கிய மாற்றமானது நீண்ட காலத்தில் பொருளாதார வளர்ச்சியினை அடைவதற்கான அடிப்படையாக விளங்குகிறது. இச்சந்ததியினர் அல்லது குழுவினர் யுத்தத்தினால் விகித சமமற்ற முறையில் பாதிக்கப்பட்டுள்ளனர். அதாவது, முன்னாள் போராளிகள், மாற்றுத்திறனாளிகள், பெண்தலைமைத்துவக் குடும்பங்கள் மற்றும் காணாமற் போனோரது குடும்பங்களை பல தசாப்தங்களாக தேக்கமடைந்திருக்கும் பொருளாதாரத்திற்குள் ஒருங்கிணைப்பதில் விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும். தொழிலாளர் சந்தையில் குறிப்பாக கிராமிய இளைஞர்கள் மற்றும் யுவதிகளுக்கு உள்ளகப் பயிற்சிகள், தொழில்சார் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள், வயது வந்தோருக்கான நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பகுதிநேர அல்லது முழுநேரக் கல்வி மற்றும் பயிற்சிகள் மீது முதலீடுகள் தேவைப்படுகின்றன. அத்தகைய வாய்ப்புக்கள் கிராமிய வேலை தேடுபவர்கள் தொழில் தேடுகின்ற மேலதிக தடைகளை எதிர்நோக்காத விதத்தில் வருமானம் ஈட்டக்கூடியனவையாக இருத்தல் வேண்டும். அனைத்து நிகழ்ச்சித்திட்டங்களும் நன்கு வரைவிலக்கணம் செய்யப்பட்டனவாக இருத்தல் வேண்டும் என்பதுடன் மாகாணத்திற்கான பொருளாதார உபாயங்களுடன் அடிப்படையில் இணைக்கப்பட்டனவாகவும் இருத்தல் வேண்டும்.

அதேபோன்று, போரினால் அழிவடைந்த சமூகத்தின் விசேட தேவைகளை கருத்திற் கொண்டு அபிவிருத்திக்கான நிறுவனவியல் ரீதியாக இயலுமையினை மேம்படுத்தல் வேண்டும். தொழிலாளர்களது உரிமைகள் மற்றும் பாதுகாப்பு நியமங்கள் கடந்த தசாப்தங்களாக புறக்கணிக்கப்பட்டிருந்தமையின் காரணமாக தொழிலாளர் தரங்களினை உயர்த்துவதற்கு **தொழிற்சங்கங்கள் மற்றும் ஏனைய தொழிலாளர் நிறுவனங்களை மீளக்கட்டியெழுப்புவதற்கான தேவை காணப்படுகிறது.** தொழிலாளர் இயலளவினை மேம்படுத்துவதற்கான மனிதவள அபிவிருத்தி தேவைப்படுவதுடன் தற்போது கிடைக்கத்தக்கதாகவுள்ள தொழிலாளர்களைப் பயன்படுத்தி தொழில் வெற்றிடங்களுடன் பொருந்தச் செய்வதற்கான வினைத்திறனான தொழில் பணிகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவைப்படுகின்றன. வேளாண்மை மற்றும் கைத்தொழில்களுக்கான அரச நிறுவனங்களுக்கு சிறிய உற்பத்தியாளர்கள் மற்றும் கைத்தொழில்களின் புதிய தொழில்முயற்சிகளுக்கு ஊக்கமளிப்பதற்காகவும் புத்துருவாக்கத்தினை ஏற்படுத்துவதற்காகவும் அதிக வளங்கள் வழங்கப்படல் வேண்டும். அத்தகைய நோக்கத்திற்கு தேசிய மற்றும் பன்னாட்டு நிறுவனங்களின் தொழில்நுட்ப ஒத்துழைப்பு பெரிதும் உதவியளிக்கும்.

**காலநிலை மாற்றம் மற்றும் ஏனைய நிச்சயமற்ற தன்மைகள்**

காலநிலை மாற்றங்களுக்கும் இயற்கை அனர்த்தங்களுக்கும் தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மையினைக் கட்டியெழுப்பும் விடயத்தில் வட மாகாணம் வேளாண்மையில் தங்கியிருப்பதனையும் அது வரண்ட வலயத்தில் அமைந்திருப்பதனையும் கவனத்தில் கொண்டு பொருளாதார வளர்ச்சி உபாயங்களில் அதற்கு முக்கியத்துவம் வழங்கப்படல் வேண்டும். காலநிலை மாற்றத்தின் தாக்கங்கள் எதிர்வுகூறப்பட முடியாதனவாக இருப்பதனால் கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் பொருளாதார வல்லுநர்கள் காலநிலை மாற்ற இடர்நேர்வுகளினை அதனை எதிர்பார்த்து ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைத் திட்டங்களை ஒழுங்கமைத்துப் பின்பற்ற வேண்டியுள்ளது. காலநிலை தகவல்களைப் பரப்புவதற்கான மேம்படுத்தப்பட்ட முறைமைகள், காலநிலைக்கு தாக்குப்பிடிக்கக்கூடிய வசதிகளின் அபிவிருத்தி, குறைந்த செலவுடைய காப்புறுதி ஏற்பாடுகள் உள்ளடங்கலான சிறந்த நடைமுறை உதாரணங்களை பரந்துபட்ட பன்னாட்டு வளங்கள் மூலம் பயின்று கொள்ளலாம்.

யாழ்ப்பாண நகர அபிவிருத்தி பற்றி ஓரளவு கவனம் செலுத்தப்படுகின்ற வேளையில், வடக்கிலுள்ள சிறிய நகரங்கள் பெருமளவிற்குப் புறக்கணிக்கப்படுகின்றமை புவியியல்சார் ஏற்றத்தாழ்வுகள் மற்றும் சமச்சீரற்ற அபிவிருத்தி என்பனவற்றுக்கு வழிவகுக்கின்றது. கிராமியப் பொருளாதாரங்கள் சிறிய நகரங்களிலிருந்து விடுவிக்க முடியாதவை. அவை கிராமிய வீட்டுத்துறையினர் அதிகளவில் தங்கியுள்ள வருமான உருவாக்க வாய்ப்புக்களின் பல்வேறு மூலங்களுக்கான மையப்புள்ளியாக அமைந்துள்ளன. சனத்தொகை குறைவடைந்தமையின் காரணமாக பொருளாதார மற்றும் சந்தை மையங்களான அவற்றின் முக்கியத்துவமும் உயர்வடைந்தது. வடக்கு மாகாணத்தின் சிறிய நகரங்களிற்கான அபிவிருத்தி திட்டத்தின் பகுதியாக வீடமைப்பு மற்றும் உற்பத்தி வசதிகள், போக்குவரத்துக் கிடைப்பனவு மற்றும் சுகாதாரம், கல்வி போன்ற பணிகளிற்காக வலயங்களாக்கப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7. துறைசார் முன்னுரிமைகள்

### வேளாண்மை

சிறு உடமையாளர் வேளாண்மைத்துறை வடக்கு மாகாணத்தின் எதிர்கால பொருளாதார வளர்ச்சிக்கான ஓர் முக்கிய தூண்டுநராக விளங்குகிறது. இது பிரதேச வீட்டுத்துறையினரில் ஏறத்தாழ 60 சதவீதத்தினர் இதில் ஈடுபட்டுள்ளமையினூடாக உணவுப் பாதுகாப்பிற்கு நேரடியாகப் பங்களிப்பதுடன் கடுமையான வறுமைக் குறைப்பிற்கும் உதவுகின்றது. வடக்கின் மிகுதியான நிலப்பரப்புடன், உற்பத்தி மற்றும் வருமானங்களை அதிகரிப்பதற்கும் உள்ளூர் வேளாண்மைக் கைத்தொழில்களின் அபிவிருத்திக்கான மூலம் பொருட்களை வழங்கும் செயன்முறை, துணைக் கைத்தொழில்களுக்கு தூண்டுதலளித்தல் மற்றும் கிராமிய பண்ணை அல்லாத பொருட்கள் மற்றும் சேவைகளிற்கான உண்மைக் கேள்வியினை உருவாக்குதல் போன்ற செயன்முறைகளுக்குப் பரந்தளவான வாய்ப்பு காணப்படுகிறது. வளர்ச்சியை தூண்டுவதனால் ஏற்படும் வெற்றியானது துறைகளின் பொருளாதார செயற்பாட்டாளர்களின் பல தரப்பட்ட தன்மையினைக் கருத்திற்கொண்டு தயாரிக்கப்பட்ட உபாயக் கலவையொன்றினை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும்.

- **வீட்டுத் துறையின் மீள் எழுச்சிக்கான வேளாண்மை உணவுப் பாதுகாப்பு வேளாண்மை:** வீட்டுத்துறையினர், குறிப்பாக, வாழ்வாதாரத்திற்கான வேளாண்மையில் தங்கியுள்ளோர் தமது அடிப்படை உணவு மற்றும் ஊட்டச்சத்துத் தேவைகளினை வீட்டுத்தோட்டத்தினூடாக பூர்த்தி செய்துகொள்ளக்கூடிய தன்மையினை உறுதிப்படுத்துவதற்கு முக்கியத்துவமளிக்கப்படல் வேண்டும். அபிவிருத்தி உபாயங்கள், வீட்டுத்துறையினர் மற்றும் சமூகத்தினரை மையப்படுத்திய ஓர் பரந்துபட்ட அணுகுமுறையினைப் பயன்படுத்தி பன்முகப்படுத்தப்பட்ட வருமான மூலங்களினை இலக்காகக் கொண்டிருத்தல் வேண்டும். இது உள்ளூர் விதை உற்பத்தி மற்றும் நீர் முகாமைத்துவத்தினை ஊக்குவிப்பதில் தலையீடுகளை மேற்கொள்வதன் மூலம் உதவப்படுகின்ற வீட்டுத்தோட்டம், கால்நடை வளர்ப்பு மற்றும் தொகுதிவாரியான நன்னீர் மீன்பிடி உற்பத்திகளினை ஊக்குவிப்பதனை உள்ளடக்கலாம். வீட்டுத்துறை மட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் மிகை உற்பத்திகளை உள்ளூரில் விற்பதன் மூலம் அதனைக் கூலி வருமானத்திற்கான துணைநிரப்பியாகப் பயன்படுத்தலாம்.
- **இலாபகரமான நீடித்துநிலைத்திருக்கக்கூடிய வேளாண்மை உற்பத்தியினை அதிகரித்தல்:** வேளாண்மை, மீன்பிடி மற்றும் கால்நடை வளர்ப்புக்களினூடாக வேளாண்மை உற்பத்திகளின் தரம் மற்றும் அளவினை அதிகரிக்கலாம். முக்கியமான துறைகள் பரந்தளவில் ஊக்குவிப்பு மற்றும் சொட்டு நீர்ப்பாசனம் போன்ற குறைந்த செலவிலான தொழில்நுட்பத்தினை உள்ளீர்த்தல்இ சராசரியான உற்பத்திச் செயன்முறையிலிருந்து சிறந்த நடவடிக்கைகளைப் பெறும் விதத்தில் மாகாண அடிப்படையிலான முயற்சிகள் மற்றும் பயிரிடப்படும் நிலம் மற்றும் பயன்படுத்தப்படும் உள்ளீட்டு அலகொன்றிற்கான உற்பத்திகளின் அளவை அதிகரித்தல் போன்ற செங்குத்தான வினைத்திறனை அதிகரிப்பதனை உள்ளடக்குகிறது. இறுதியாக, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மீதான முதலீடு, வினைத்திறனான விரிவாக்க உதவியினூடான பரப்புதல் என்பன பொருளாதார வருவாய்களில் ஏற்படக்கூடிய எதிர்கால அதிகரிப்பினை உறுதிசெய்கின்றன. மேற்குறிப்பிட்டவை சேதன வேளாண்மையலிருந்து உக்கக்கூடிய பொதியிடலுக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலாபகரமான சூழலுக்கிசைவான நடைமுறைகளினைத் தூண்டுவதனை பக்கபலமாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

- **நீடித்துநிலைத்திருக்கக்கூடிய வேளாண்மைக்கான பேரண்டப் பிரச்சினைகள் மற்றும் ஆபத்துக்களை கையாளுதல்:** வேளாண்மையின் நீண்டகால ஆற்றலை உறுதிப்படுத்துவதற்கு அறியப்பட்ட எதிர்கால இடர்களினை கையாள்வதற்கு இன்றே நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். நீர்ப் பற்றாக்குறை அனேகமாக வரையறுக்கப்பட்ட காரணியாகும். எனவே, நீரைச் சேமிக்கும் இயலளவை விரிவடையச் செய்வதுடன் வேளாண்மை உற்பத்தியில் சிக்கனமான நீர்ப் பாவனை அதிகரிக்கப்படல் வேண்டும். எதிர்கால உற்பத்தியினைப் பேணுவதற்கு சூழல் முறைமை முகாமைத்துவம் மற்றும் இயற்கை வளத் தளத்தின் பாதுகாப்பு என்பன அவசியமானவையாகும். சந்தைக் கேள்விகளின் நிலை பற்றி அறிந்திருத்தல், உற்பத்திகளினை சேகரித்தல், தரப்படுத்தல், பாதுகாத்தல் மற்றும் சந்தைப்படுத்தலை ஒழுங்கமைக்கக்கூடிய ஒன்றுசேர்த்த முறைமைகளின் அபிவிருத்தி வேளாண்மை வருமானங்களை சூறையாடிக் கொண்டிருக்கும் தொடர்ச்சியான சந்தை விலைத் தளம்பல்களை கட்டுப்படுத்துவதற்கு வாய்ப்பாக அமையும்.

**கைத்தொழில்கள்**

எந்தவொரு அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரத்திலும், கைத்தொழில்மயமாதல், உயர்மட்டங்களிலான பொருளாதார வளர்ச்சியினை அடைவதற்கு முக்கியமானதொன்றாகும். கிரமமான மாதாந்த வருமானங்களை வழங்கக்கூடிய கைத்தொழில்கள் போரினால் அழிவடைந்த வடமாகாணத்தில் அதிக கேள்வியுடைய தொழில் வாய்ப்புக்களினை உருவாக்கும். இதனடிப்படையில், நீண்ட காலப் போரினால் அழிவடைந்து மீண்டெழும் பிரதேசத்தின் உற்பத்திக்கும் நலிவுற்ற தொழிற்படைக்கும் தடையாக விளங்கும் விடயங்களைக் கட்டுப்படுத்துவதற்குப் பொருத்தமான கைத்தொழில் கொள்கை அவசியமானது[18].

வடபகுதி பெரியளவிலான கைத்தொழில்களுக்கு உகந்ததாக இல்லை. அதிகளவான திறன் வாய்ந்த தொழிற்படை குறைவு மற்றும் மெற்றோ பொலிட்டன் நகரங்களிலிருந்தும் துறைமுகத்திலிருந்தும் தூரத்தில் அமைந்துள்ளமை போன்ற ஏனைய காரணங்களினால் போட்டித்தன்மை மட்டுப்படுத்தப்படுகின்றது. வடக்கில் தசாப்தங்களாக உள்ளூர் கைத்தொழில்களில் பின்னடைவினால் காணப்பட்ட தொழிலாளர் வினைத்திறனின் அடிப்படையில் உற்பத்தி போட்டித்தன்மையை அடைய முடியாது. எனவே, நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில்கள் உள்ளூர் வளங்களைப் பயன்படுத்தி உள்ளூர் சந்தைகளுக்கும் ஏற்றுமதிச் சந்தைக்கும் பொருட்களை உற்பத்தி செய்வது வெற்றியளிக்கக்கூடியதாக அமையும். நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாண்மைகளை ஊக்குவிக்கும் தேசிய கொள்கைகள் தற்போதுள்ள வளங்கள் மற்றும் திறன்களினடிப்படையில் வடக்கிற்கு ஒப்பீட்டு ரீதியில் அனுகூலங்களை அளிக்கக்கூடிய குறிப்பாக கைத்தொழில்கள் மற்றும்

---

18 2013ஆம் ஆண்டளவில் நாட்டிலுள்ள மொத்த முறைசார் கைத்தொழில் நிறுவனங்களில் வட மாகாணம் 1.4 சதவீதம் என்ற மிகச் சிறியளவான பங்கினைக் கொண்டுள்ளதுடன் முறைசார் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள மொத்த நபர்களின் எண்ணிக்கையில் 0.2 சதவீதத்தினர் தொழிலில் அமர்த்தப்பட்டுள்ளனர் [பொருளாதார தொகைமதிப்பீடு 2013/14].



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறைகள் நோக்கி முதலீடுகளையும் அவற்றின் நடவடிக்கைகளினையும் வழிப்படுத்துவதனூடாக ஊக்குவிக்கப்படுதல் வேண்டும்.

குறைந்த குடித்தொகையினையும் அத்துடன் தொழிற்படை பரம்பலின் தற்போதைய நிலையையும் கருத்திற்கொள்கையில் கைத்தொழில்கள் பிராந்தியம் முழுவதிலும் பரந்தளவில் அமைந்து கிராமிய குடித்தொகைக்குப் பரந்தளவில் வாய்ப்பளிக்கும் ஏற்றத்தாழ்வற்ற வளர்ச்சிக்கு இட்டுச்செல்வதாக இருத்தல் வேண்டும். நகர மையங்களில் கைத்தொழில் வலயங்களை உருவாக்குவதிலும் பார்க்க, கைத்தொழில் இணைப்புக்களை உருவாக்குவதற்கும் உட்கட்டமைப்பினைச் சிறந்த முறையில் பயன்படுத்துவதற்கும் தற்போதுள்ள சிறிய கைத்தொழில் உற்பத்தியாளர்களின் கொத்தணியின் ஊக்குவிப்பிற்கு புவியியல் ரீதியாக திட்டமிடப்படுகின்ற கைத்தொழில்கள் உதவ வேண்டும். இது புதிய கைத்தொழில்களைக் கொண்டுவரும்.

- **பெறுமதி சேர்க்கைக்கான வேளாண்மை உற்பத்திகள்:** வட மாகாண பொருளாதாரம் வேளாண்மையை அடிப்படையாகக் கொண்டிருப்பதனால், கைத்தொழில்களின் விரிவாக்கத்திற்கான ஆரம்பமாக சிறு வேளாண்மை கைத்தொழில்களுக்கான பெறுமதி சேர்க்கைகள் அமைதல் வேண்டும். பண்ணை உற்பத்திகள், கடலுணவு, பால் மற்றும் கால்நடை பதனிடல் கைத்தொழில்களின் பாரிய அதிகரிப்பு கிரமமான தொழில்வாய்ப்பு, ஆரம்ப உற்பத்தியாளர்களுக்கான வருமானம் மற்றும் கேள்வியினை உருவாக்குகிறது[19]. இப்பிரதேசத்திற்கே உரித்தான பனை மூலப்பொருள் அடிப்படையிலான உற்பத்திகள் மற்றும் பல்வேறு கடலுணவு உற்பத்திகள் போன்ற வேளாண்மைக் கைத்தொழில் உற்பத்திகள் ஏற்றுமதிக்கான சிறந்த வாய்ப்பினைக் கொண்டுள்ளன.
- **கைவினைப்பொருட்களை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களின் விரிவாக்கம்:** வடபகுதி மரவேலை மற்றும் உலோக வேலைகள் உள்ளடங்கலாக திறன்வாய்ந்த கைவினை உற்பத்திகளுக்கு வரலாற்றுப் புகழ்பெற்றது. தற்போதுள்ள திறன்களைக் கட்டியெழுப்புவதன் மூலம் சிறிய கைத்தொழில்களை அபிவிருத்தி செய்யமுடியும் என்பதுடன் அதிகரித்த உற்பத்தி மட்டங்களினை அடையும் பொருட்டு பொறி மயப்படுத்தலை தரமுயர்த்தலாம். இக்கைத்தொழில்களினை படிப்படியாக நவீனமயப்படுத்துவதும் உற்பத்தியின் அளவினை அதிகரிப்பதும் கட்டுமானக் கைத்தொழிலுக்கான மற்றும் அதனுடன் தொடர்பான மீள்கட்டுமான நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் உள்ளீடுகளை நிரம்பல் செய்வதன் மூலம் அவர்கள் பயன்பெறுவதனை இயலச்செய்யும்.
- **புதிய தயாரிப்புத் துறையின் அபிவிருத்தி:** இலத்திரனியல் பொருட்கள், மென் பொறியியல் உற்பத்திகள் போன்ற உடற்கோப்பினை அடிப்படையாகக் கொண்ட உடற்பத்தியினைப் பாதுகாப்பது, மாகாணத்திற்கான புதிய தயாரிப்புத் தளத்தினை உருவாக்குவதற்கான முதல் நடவடிக்கையின் முன்னோடியாக விளங்கும். மொழி ஒரு பிரச்சனையாக இருக்கமுடியாத தென் மற்றும் தமிழ் நாட்டிலிருந்தான தொழில்முயற்சிகளுடனான பங்குடமையானது தொழில்நுட்பவியல்

---

19 2015இன் 35 சதவீதம் தேசிய சராசரியுடன் ஒப்பிடுகையில் வடமாகாணத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான கைத்தொழிற் துறையின் ஒட்டுமொத்த பங்களிப்பில் வேளாண்மைக் கைத்தொழில் 18 சதவீதம் மட்டுமே பங்களித்துள்ளது. [இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக புள்ளிவிபரங்கள் 2017 : இலங்கை மத்திய வங்கி]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றல், ஆலோசனைகள் மற்றும் வியாபார அபிவிருத்தி ஆதரவு என்பனவற்றிற்கு ஒரு பயன்மிக்க வழியாக இருக்கும். கைத்தொழில்கள் உள்ளூர் கேள்விகளின் அடிப்படையில் மிகவும் அவதானமான முறையில் தெரிவுசெய்யப்பட வேண்டும். எதிர்கால விரிவாக்கத்திற்கு இது இன்றியமையாத காரணியாக விளங்கும். அதிகரித்த உற்பத்திகளினூடாக அதிகளவு இயலளவு பயன்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கு குறைந்தளவில் காணப்படும் தொழிற்பாட்டு மூலதனப் பிரச்சினை கருத்திற்கொள்ளப்படல் வேண்டும்.

- **புதுப்பிக்கத்தக்க வலுவாக்கம்:** சூரியவலு மற்றும் காற்றுவலு என்பவற்றுக்கான வசதி அபரிமிதமாக உள்ளமையினாலும் ஒப்பீட்டு ரீதியில் குறைவான சனத்தொகை அடர்த்தியினைக் கொண்டுள்ளமையினாலும் வடமாகாணம் புதுப்பிக்கத்தக்க வலு உருவாக்க கைத்தொழில்களை நிறுவுவதில் கணிசமான வாய்ப்புக்களைக் கொண்டுள்ளது. நீண்ட காலத்தில் செலவு குறைவானதாகக் காணப்படுவதுடன் அத்தகைய முன்னெடுப்புக்கள் பசுமைப் பொருளாதாரத்தினை கட்டியெழுப்பும் நடவடிக்கைகளுடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

**பணிகள்**

மாகாணத்தின் பணித்துறை போருக்குப் பின்னர் விரிவடைந்து மாகாணப் பொருளாதாரத்தில் 60 சதவீதத்திற்குப் பங்களித்திருக்கிறது[20]. தற்போது, பணிகள் துறையானது போக்குவரத்து, தொடர்பூட்டல் மற்றும் சில்லறை மற்றும் வியாபார பணிகளைப் பெருமளவிற்குக் கொண்டுள்ளது. அதன் அடித்தளத்தை உள்ளூரில் விரிவாக்குவதற்கும் பெறுமதியை உருவாக்கக்கூடிய விதத்தில் பணிச் சேவைகளை உருவாக்குவதற்கும் அதேபோன்று உள்ளூர் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய விதத்தில் நிதியியல் துறை மற்றும் பொதுப் போக்குவரத்துக்களிலுள்ள பணிகளை மீளவடிவமைப்பதற்குமான செயற்பரப்பினைக் கொண்டுள்ளது.

- **நிதியியல் பணிகளின் மீள்சிந்தனை:** குறிப்பாக, கிராமியத் துறையிலுள்ள நிதியியல் பணிகள் வடக்கைப் பெரிதும் பாதிப்படையச் செய்துள்ள கடன் நெருக்கடி நிலையினைக் கருத்திற் கொண்டு மீள வடிவமைக்கப்படல் வேண்டும். நீண்டகால தேவைப்பாடு, உற்பத்தியை அதிகரிப்பதற்கான குறைந்த வட்டி மூலதனம் மற்றும் சிறியளவிலான உற்பத்திகளுக்கு ஏற்புடையதான கிராமிய கொடுகடன் என்பன கருத்திற் கொள்ளப்படல் வேண்டும். உற்பத்தியினை மீள செயற்படுத்துவதற்கு தொழிற்படு மூலதனம் அவசியமானதாகும்.
- **பொதுப் போக்குவரத்துப் பணிகள்:** அதிகரித்த தொழிற்படைப் பங்கேற்பு மற்றும் சமூக வாழ்க்கை முறை போன்றவற்றுக்கு பொதுப் போக்குவரத்து விரிவாக்கப்பட வேண்டுமென்ற உண்மைத் தேவையொன்று காணப்படுகிறது. தொழிற்படையில் பெண்களின் பங்கேற்பினை அதிகரிப்பதற்கும் மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியவர்களின் நடமாட்டத்தினை மேம்படுத்துவதற்கும் பாடசாலை மாணவர்களை பாடசாலைக்கு அனுப்புவதிலுள்ள சுமைகளை இலகுபடுத்துவதற்கும் கிராமப்புறங்களிடையேயும் கிராமப்புறங்களுக்குள்ளேயும் போக்குவரத்துப் பணிகள் அவசியமாகின்றன.

---

20 இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக புள்ளிவிபரங்கள் 2017 [மூலம்: இலங்கை மத்திய வங்கி]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **கவனிப்புப் பணிகள்:** புலம்பெயர்தல், வயதான குடித்தொகையின் தோற்றம் மற்றும் பெண்கள் அரச வேலைகளில் ஈடுபடுதல் போன்றவற்றால் குடித்தொகைப் பரம்பலில் ஏற்பட்ட மாற்றங்கள் வடக்கில் கவனிப்புப் பணிகளின் அதிகரித்த தேவையினை உருவாக்கியுள்ளதுடன் அதனைப் பூர்த்தி செய்யப்படாதநிலையும் காணப்படுகிறது. முதியோர் மற்றும் சிறுவர்கள் பராமரிப்பு, அதிகளவான பணிகளை வழங்குதல் மற்றும் உயர்வான நியமங்களை பேணுதல் என்பவற்றில் சிறந்த வாய்ப்புக்களைக் கொண்டுள்ளதுடன் அவை தொடர்ச்சியாக புலம்பெயர் மக்களினால் வயதடைந்த உறவினர்களுக்காகவும் துறைசார் வல்லுனர்களினால் தமது பிள்ளைகளுக்காகவும் வலுவான அடிப்படையில் உதவியளிக்கப்படுகிறது. தொழிற்படையில் பெண்கள் பங்கேற்பு அதிகரித்தமையினால் அவர்களில் தங்கிவாழ்வோருக்கான கவனிப்புப் பணிகளுக்கான தேவைப்பாடு அதிகரித்துள்ளது.
- **நீர் மற்றும் சுகாதாரப் பணிகள்:** வடக்கின் நகர மையங்களில் நீர் மற்றும் சுகாதார உட்கட்டமைப்புக்கள் குறைவாகக் காணப்படுவதன் காரணமாக தொற்றுநோய்கள் பரவும் சம்பவங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அரசாங்கம் சமூக மருத்துவப் பணிகளுடனான முதலீடுகளுக்கு முன்னுரிமையளித்தல் வேண்டும்.
- **தகவல் தொழில்நுட்பம் மற்றும் சுற்றுலாத்துறை:** இத்துறைகள் தொழிற்படையில் அதிகளவான இளைஞர் பங்கேற்பினைக் கவரலாம். எனினும், பாதுகாப்பானதும் நன்கு கூலி செலுத்தப்படுவதுமான தொழில்நிலையினை உருவாக்குவதற்கான அவற்றின் ஆற்றல் வாய்ந்த தன்மையும் வெற்றியும் அபிவிருத்தி மற்றும் வளர்ச்சியை உறுதிப்படுத்துவதும் உரிய காலத்திற்கு முன்னரான தேக்கநிலையினைத் தவிர்ப்பதும் கொழும்பிலுள்ள கம்பனிகளின் முதலீடு மற்றும் பேணிப் பராமரித்தல் என்பனவற்றிலேயே தங்கியிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8. பேரண்டப் பொருளாதார முன்னுரிமைகள்

பொருளாதார அபிவிருத்திக்கான கட்டமைப்பு, வடக்கிற்கான 2030இன் தொலைநோக்கினை அடைவதற்கு மாகாண மட்டத்தில் எடுக்கப்படவேண்டிய பல்வேறு பிரச்சனைகளினை இனங்கண்டுள்ளது. இதனடிப்படையில், நீண்டகால உபாயத் திட்டமிடலை மேற்கொள்வதற்கும் போரினால் பாதிக்கப்பட்ட சமூகத்தின் விசேட தேவைகளைக் கவனத்திற்கொண்டு அபிவிருத்தி முயற்சிகளை ஒருங்கிணைப்பதற்கும் அம்முயற்சிகளை மேற்பார்வை செய்வதற்கும் 'வடபகுதி திட்டமிடல் பணியகம்' ஒன்று அமைக்கப்படல் வேண்டும் என பரிந்துரைக்கப்படுகிறது. இப்பணியகம் முன்னணி புத்திஜீவிகள், தனியார்துறை, மாகாண மற்றும் மத்திய அரசாங்க அலுவலர்களின் அங்கத்துவத்தினூடாக அரச மற்றும் சிவில் சமூகங்களுக்கிடையேயான ஒருங்கிணைப்பை ஊக்குவித்தல் வேண்டும். வினைத்திறனுடன் செயற்படுவதற்கு பணியகம் சுயாதீனமாக இருத்தல் அவசியம். எனினும், இவற்றினது வெளியீடுகளின் சொத்துரிமை நடைமுறைப் பொறுப்பாண்மைகளுடன் கூடிய அர்த்தமுள்ள செயற்பாட்டாளர்களின் ஈடுபாடுகளிலிருந்து பெறப்பட்டவையாக இருத்தல் வேண்டும். ஆரம்பத்தில், இப்பணியகம் பின்வரும் சவால்களுக்கான தீர்வினைப் பெற்றுக்கொள்ள வழிகாட்டக் கூடியதாக இருக்கலாம்:

- **அபிவிருத்தி நிதியிடல்:** சிறிய கைத்தொழில்களினை வளர்க்கும் நீண்டகால முதலீடுகளை செயற்படுத்தல், முதலீட்டு ஆலோசனைகளை வழங்குதல், அவற்றின் வெற்றியினை உறுதிப்படுத்தல் போன்ற நோக்கங்களுக்காக வடக்கிற்கான ஓர் அபிவிருத்தி நிதி நிறுவனம் அமைக்கப்படல் வேண்டும். இது அதிகரித்த உற்பத்தி மற்றும் தொழில்நிலைக்காகவும் அதேபோன்று ஆரம்ப உற்பத்திகளுக்கான பாரிய கேள்விக்காகவும் சொத்துக்களின் இயலளவுப் பயன்பாட்டிற்கான தாங்கக்கூடிய தொழிற்படு மூலதனத்தினை வழங்கும்.
- **தொழிலாளர் சந்தை விரிவாக்கம்:** மகளிர் மற்றும் இளைஞர்களினது தொழிற்படைப் பங்கேற்பில் தேவைப்படுகின்ற நீண்ட கால மாற்றங்களை வலியுறுத்துவதற்கு குறிப்பாக, தொழிலாளர் கேள்வி மற்றும் நிரம்பலை எதிர்வுகூறுகின்ற நியதிகளில் பகுப்பாய்வு திட்டமிடல் மற்றும் கண்காணிப்பதற்குத் தொழிற்படை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் அவசியமாகும். தொழிற்படுகின்ற வாய்ப்புக்களை பன்முகப்படுத்தல், பணியாற்றும் வேலைச்சூழலை மேம்படுத்தல் மற்றும் மனிதவள இயலாற்றலைக் கட்டியெழுப்புதல் என்பனவற்றைத் தீவிரப்படுத்தும் விதத்தில் தொழிற்சந்தைக் கொள்கை அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். தொழிலாளர் கிடைப்பனவு தொடர்பான தகவல்கள் கிடைக்கப் பெறாமையினை நிவர்த்தி செய்தல், மக்களை தொழில்களுடன் இணைத்தல் மற்றும் ஆலோசனை வழங்குதல் போன்றவற்றுக்காக வடக்கிற்கான தொழில் மையமொன்று அமைப்பது தொடர்பில் ஆராயப்பட வேண்டும்.
- **இயற்கை வள முகாமைத்துவம்:** இப்பிரதேசத்தின் அபிவிருத்தியில் வேளாண்மைத் துறைக்கான முக்கியத்துவத்தினைக் கருத்திற்கொண்டு **வடக்கு இயற்கை வள முகாமைத்துவ குழுவொன்றினை** அமைத்தல் பற்றி கருத்தில் எடுத்தல் வேண்டும். நிலம் மற்றும் இயற்கை வளங்களின் பயன்பாட்டினை நிலைத்திருக்கக்கூடிய வகையில் மேற்பார்வை செய்தல், திட்டமிடல் பயன்பாடு மற்றும் சூழல் பாதுகாப்பு உள்ளடங்கலான இயற்கை முறை முகாமைத்துவத்திற்கான பொறுப்புக்களை மேற்கொள்ளுதல் மற்றும் நீர்ப் பற்றாக்குறை போன்ற இடர்களினை வெளிப்படுத்துவதற்கான உபாயங்களினைத் திட்டமிடல் போன்றவை இக்குழுவின் முக்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற்பாடுகளாக அமையலாம். தற்போதைய பிரச்சினைகள் மற்றும் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான உடனடி நடவடிக்கைகள் அவசியமானவையாகும்.

- **நீடித்துநிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்திக்கான ஆராய்ச்சி மற்றும் கொள்கை:** வடக்கினைத் தளமாகக் கொண்ட நிறுவனங்கள், போரினால் பாதிக்கப்பட்ட சமூகத்திற்காக ஆராய்ச்சி, கொள்கை ஈடுபாடு மற்றும் அபிவிருத்தி முன்னெடுப்புக்களைக் கண்காணித்தல் என்பனவற்றை மேற்கொள்வது அவசியமானதாகும். நீடித்தநிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்திக்கான ஆராய்ச்சி மற்றும் கொள்கை நிறுவனமொன்றினால் பரந்தளவில் காணப்படும் படுகடன் சுமை, இளைஞர் வேலை வாய்ப்பின்மை, மகளிர் மற்றும் அவர்களில் தங்கியிருப்பவர்களின் சவால்கள் போன்ற ஏற்கனவேயுள்ளதும் தோற்றம்பெற்று வருவதுமான பிரச்சனைகளைக் கட்டுப்படுத்துவதற்காகச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட கொள்கை அபிவிருத்திகளுக்கு உதவியளிப்பதற்கான அபிவிருத்தியை முன்கொண்டு செல்லல் மற்றும் சந்தைப் போக்குகள், பாரியளவு அபிவிருத்திச் செயற்றிட்டங்களைக் கண்காணித்தல், உரிய நேரத்தில் கரிசனைகளை எழுப்புவதற்கான யோசனைகளை உருவாக்குதல் என்பன விரைந்த அபிவிருத்தியை ஏற்படுத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9. முடிவுரை

உயர்ந்த தொழிலின்மை வீதம், வறுமை மற்றும் அதிகரித்துச் செல்லும் படுகடன் சுமை என்பனவற்றினை பண்புகளாக கொண்ட வடக்கின் பொருளாதார நெருக்கடி, போருக்குப் பின்னரான எச்சமாகக் காணப்படும் பிரச்சனைகளை விளங்கிக் கொள்ளும் விதத்தில் பொருளாதார அபிவிருத்திக்கான புதிய நீண்ட கால தொலைநோக்கினையும் போக்கினையும் தேவைப்படுத்துகிறது. இவ்வறிக்கையானது மூன்று அம்சங்களான: மாகாணத்துடன் தொடர்புபட்ட மூலதனப் பங்கீடு, தொழிலாளர், நிலம் மற்றும் இயற்கை மூலவளங்களை அடிப்படையாகக் கொண்ட பொருத்தமான உற்பத்தியை அடையாளம் காணுவதன் மீது வரையப்பட்ட கட்டமைப்பின் அபிவிருத்தியூடாகப் பேரண்டப் பொருளாதாரப் பகுப்பாய்வினை முன்வைப்பதுடன் இது உற்பத்தி போன்றவற்றிற்கு வசதியளிக்கின்ற இயலுமைப்படுத்தும் சூழலொன்றிற்கான முக்கியத்துவத்தினை வலியுறுத்துவதுடன், தற்போதைய மற்றும் எதிர்காலத்தில் காணப்படக்கூடிய தடைகளை நீக்குவதன் மீதும் செயலாற்றுகிறது அத்துடன் இது பணியாற்றுவதனை இலக்காகக் கொண்ட சமூகங்களில் இயலளவுகள் மற்றும் பாதிக்கப்படும் தன்மையினை ஒழித்தலில் காணப்படும் உற்பத்தி போன்ற அடிப்படைத் தன்மைகளையும் முன்வைக்கிறது.

பொருளாதார வளர்ச்சிப் பாதை மெதுவானதெனினும் உறுதியாகக் காணப்படுவதுடன் அபிவிருத்திக்கான சமூக அடித்தளங்களை வலுப்படுத்துவதற்காக சமூகங்களில் செய்யப்படும் முதலீடுகள் வடக்கிற்கு மிகப் பொருத்தமான உபாயம் எனவும் முன்மொழியப்படுகிறது. இவ்வுபாயமானது சிறியளவு உற்பத்தியாளர்களை முனைப்பாகக் கொண்ட ஏற்கனவேயுள்ள பொருளாதாரத் தளத்தின் மீது கட்டியெழுப்பப்பட வேண்டியிருப்பதுடன் உள்ளூர் மூலவளங்களைப் பயன்படுத்தச் செய்வதற்கும் தற்போதைய தேர்ச்சி மட்டங்களை அதிகரித்தளவில் மேம்படுத்துவதற்கும் எதிர்பார்க்கிறது. சுகாதாரம், உணவுப் பாதுகாப்பு போன்ற சமூக மீளெழுச்சியைக் கட்டியெழுப்புவதற்காகச் செய்யப்படும் முதலீடுகள் பொருத்தமான தொழில்நுட்பம், ஒழுங்குபடுத்தல்கள், சந்தை முறைமை அபிவிருத்தி போன்றவற்றுடன் சேர்ந்து உதாரணமாக வலுவான வளர்ச்சிக்கும், மிகத் தேவையான தொழில்களை உருவாக்குவதற்கும் வருமானத்தினை உயர்த்துவதற்கான முன்னோக்கிய ஒட்டுமொத்த உத்வேகத்தினை மீளவலுப்படுத்தும்.

இவ்வறிக்கையானது, விசேடமாக, வடக்கின் போருக்குப் பின்னரான பிரச்சனைகள் தொடர்பான சவால்களைப் பற்றிக் குறிப்பிடுகிறது. புதிய பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமொன்றினை முன்கொண்டு செல்வதும், செயற்பாடுகளை நடைமுறைக்கிடுவதும் அதிகரித்த சமூகப் பங்கேற்பு மற்றும் தொழிற்படை அபிவிருத்தி என்பனவற்றின் மூலம் நிகழ்ச்சித்திட்டங்களை மீள இயலுமைப்படுத்துவதும் தலைமைத்துவத்தின் தேவையாகக் காணப்படுகிறது. இவற்றைக் கட்டுப்படுத்துவதற்குக் காத்திரமான நடவடிக்கைகள் தேவையாகவுள்ள அதேவேளையில் மூலவளங்கள் சிறந்த முறையில் பயன்படுத்தப்படுவதனையும் வினைத்திறன்மிக்க தீர்மானங்கள் எடுக்கப்படுவதனையும் உறுதிப்படுத்தும் விதத்தில் மாகாண மட்டத்தில் புதிய வளர்ச்சி உபாயமொன்றினை வழங்குதல் வேண்டும். வேளாண்மை, கைத்தொழில்கள் மற்றும் சேவைகளில் துறைவாரியான, மாகாண ரீதியானதுமான முன்னுரிமை விடயங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. உபாயத்தின் திட்டமிடல் மற்றும் இணைப்புக்களை முன்கொண்டு செல்வதற்கும் அதேபோன்று நீண்ட கால அபிவிருத்தி நிதியிடலைப் பெற்றுக்கொள்ளுதல் தொழிற்சந்தையினை விரிவுபடுத்துதல் போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போருக்குப் பின்னரான தனித்துவமான சவால்களைக் கையாள்வதற்கென விசேட நிறுவனமொன்றினை உருவாக்குவதற்கும் விதந்துரைக்கப்பட்டுள்ளது.

இப்பிராந்தியத்தில் உருவாகி வருகின்ற பார்வைகள் மற்றும் அனுபவங்களைக் கவனத்திற் கொள்கின்ற விதத்தில், இக்கட்டமைப்பானது, வடக்கின் பொருளாதார அபிவிருத்திக்கான முதன்மைத் திட்டத்தினை உருவாக்குவதற்கு ஆதரவளிப்பதற்கான பொக்கிஷமொன்றாக முன்வைக்கப்படுகிறது. இதன் உள்ளடக்கங்கள் அரசாங்கம், கொடை வழங்கும் சமூகம் மற்றும் பரந்த சிவில் சமூகம் என்பனவற்றிலுள்ள தீர்மானங்களை வகுப்போரின் கலந்துரையாடல்கள், விவாதங்கள் மற்றும் ஆராய்ச்சிகளை மேலும் தூண்டுமெனவும் வட மாகாணத்திற்கு சுபீட்சத்தினையும் சமத்துவத்தையும் கொண்டுவரும் எனவும் அனைவரினதும் பங்களிப்புடனான இலக்கினை நோக்கிய இணைப்பினையும் ஒத்துழைப்பினையும் ஊக்குவிக்குமெனவும் பலமாக நம்புகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச அலுவலகம் - கிளிநொச்சி, இலங்கை மத்திய வங்கி.
அறிவியல்நகர், கிளிநொச்சி.

Print@Andra 021 222 8929

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org